**கவனிக்க** .- *2016.04.12 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1964 - 2016 අප්‍රේල් මස 22 වැනි සිකුරාදා - 2016.04.22**

*1964 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 892 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 894 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | 902 | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க** .- *வேலையாளர்களின் வரவு செலவுத்திட்ட நிவாரணப்படி சட்டமூலம் 2016, சனவரி மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, மே மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

## கட்டுநாயக்க- சீதுவை நகர சபை

மேல் மாகாண அரச சேவையில் கட்டுநாயக்க - சீதுவை நகர சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ் காணப்படும் பதவிகளுக்கு தகைமையுள்ள மேல் மாகாணத்தில் நிரந்தரமாகக் குடியிருப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. அறிவித்தலின் கடைசியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம் "செயலாளர், கட்டுநாயக்க - சீதுவை நகர சபை, சீதுவை" எனும் முகவரிக்கு 2016.05.20 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும். கேள்விப்பத்திரத்தின் இடது பக்க மேல் மூலையில் உரிய பதவியை குறிப்பிடல் வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவம், குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும்.

| பதவியின் பெயர் | பதவி எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|
| அலுவலக சேவையாளர் II | 2 | ரூபா 24,250-10×250-10×270-10×300-12×330-ரூபா 36,410 (12 ஆம் கட்டம் ஆரம்ப கட்டமாகும்) | க.பொ.த. (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் |

தொழிற்றகைமை/அனுபவம் - நூலக சேவை நடவடிக்கையில் அனுபவம் பெற்றிருப்பது விஷேட தகைமையாகக் கொள்ளப்படும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பப்படிவத்தை இறுதியாகப் பெற்றுக்கொள்ளும் தினத்தில் வயது 18 இற்கு குறையாததாகவும் 45 இற்கு மேற்படாததாகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில், மாகாண அரச சேவையில் இருக்கும் நிரந்தர ஊழியர்களுக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.

5. **பொதுத் தகைமைகள்**-

(i) விண்ணப்பதாரி இலங்கையராக இருத்தல் ;

(ii) சிறந்த நன்னடத்தையும் சித்த சுயாதீனமுள்ளவராகவும் இருத்தல் ;

(iii) விண்ணப்பப்படிவம் பெற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தில் 3 வருட காலம் மேல் மாகாணத்தில் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் ;

(iv) தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தால் குற்றம்சாட்டப்பட்டவராக அல்லது அரச/மாகாண அரச சேவையிலிருந்து நீக்கப்பட்டவராக இருக்காதோடு அரச நிர்வாக சுற்றுநிரூபத்தின் இல. 44/90 இன் கீழ் ஓய்வூதியம் பெறுபவராகவும் இருத்தல் கூடாது;

(v) இந்த பதவிக்காக தெரிவு செய்யப்படுமிடத்து ஒரு மாத காலத்திற்குள் அரச வைத்தியரால் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனைக்கு உட்பட வேண்டும். அப்பரிசோதனையில் உடல் ரீதியாக தகுதியற்றவர் என காணப்படுமிடத்து நியமனம் இரத்துச் செய்யப்படும்.

6. **ஆட்சேர்ப்பு முறை.**- தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் பொது நிர்வாக சுற்றுநிரூபத்தின் இல. 24/95 இற்கு இணங்க நடாத்தப்படும் முறையான நேர்முகப் பரீட்சையினடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர் ;

7. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.**-

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் கிடைக்கத்தக்கது;

(ii) விதவை/தபுதாரர்/அநாதை சம்பள நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யவேண்டும் ;

(iii) தெரிவுசெய்யப்பட்டோர் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர். அக்காலப்பகுதியில் வேலை, வருகை, நடத்தை என்பன திருப்தியளிக்குமாயின், தகைமைகாண் கால முடிவில் சேவை நிரந்தரமாக்கப்படும். தற்போது அரச சேவை/மாகாண சேவையிலிருப்போர், நிரந்தரமாக்கப்பட்டோர் ஒரு வருட வேலை பதில் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு இணைத்துக் கொள்ளப்படுவர் ;

(iv) தாபனவிதி கோவை நிபந்தனைகள், மேல் மாகாண சபை நிதி நியதிச் சட்டங்கள், ஆளுநரின் கட்டளைகள், மாகாண அரச ஆணைக்குழுவினால் காலத்திற்குக்காலம் பிறப்பிக்கப்படும் கட்டளைகள், மாகாண நிர்வாக ஆணையாளர் மற்றும் மாகாண நிர்வாக நிறுவனத்தின் தலைவரின் கட்டளைக்கு இணங்க செயற்பட அனைத்து ஊழியரும் கட்டுப்படுவர்.

8. விண்ணப்பதாரி பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) வதிவிடத்தை உறுதிப்படுத்தும் பிரதேச செயலாளரின் சான்றிதழ் ;
(2) கல்விச் சான்றிதழ்.

கே. ஏ. சீ. பி. புஷ்பகுமார,
செயலாளர்,
சபையின் அதிகாரமளிக்கப்பட்டவர்,
கட்டுநாயக்க-சீதுவை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
கட்டுநாயக்க-சீதுவை.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**கட்டுநாயக்க - சீதுவை நகர சபை**

.......................................................................... பதவிக்கு விண்ணப்பம்

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் :----.
2. தேசிய அடையாள அட்டையின் இல. :----.
3. (அ) நிரந்தர வதிவிட முகவரி :----.
தொலைபேசி இல. :----.
(ஆ) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இல. :----.
4. (அ) பிறந்த திகதி :----.
(ஆ) ........................... ஆந் திகதிக்கு வயது :- வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
5. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
6. திருமணமானவர்? திருமணமாகாதவர் :----.
6. பால் நிலை :----.
7. கல்வித் தகைமைகள் :----.
8. தொழிற்றகைமை மற்றும் அனுபவம் :----.
9. நீர் இதற்கு முன்னர் அரச சேவையில் பணிபுரிந்துள்ளீரா? அவ்வாறாயின் அது பற்றிய விபரம் :----.

என்னால் மேலே கூறப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையெனவும் சரியெனவும் உறுதிப்படுத்துகின்றேன். இத்தால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் உண்மையில்லை தவறு என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் நான் இப்பதவிக்கு தகைமையற்றவன் ஆகுவேன் எனவும் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் நஷ்டஈடு வழங்கப்படாது சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிந்துள்ளேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----.

**திணைக்களத்தின்/நிறுவனத்தின் தலைவரின் கையொப்பம்**

இந்நிறுவனத்தில்.............................................................. பதவியிலிருக்கும் திரு./திருமதி/செல்வி .................................... என்பவரின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவரின் வேலை, வரவு, நடத்தை திருப்தியளிக்கின்றன எனவும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ள கருதவுமில்லை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார்/விடுவிக்கப்படமாட்டார்.

---------------------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி :----.

4-965

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## கடுவெல மாநகர சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 71 (1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் மாகாண சபையின் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி ''பாவுலு பெரேரா மாவத்தை'' என பெயரிடப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

லேகா கீதாஞ்சலி,
மாநகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.

**அட்டவணை**

1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : கடுவெல மாநகர சபை
2. மாவட்டம் : கொழும்பு
3. கிராம அலுவலர் பிரிவு : 474/சீ - பொத்துஅராவ
4. வீதியின் தற்போதைய பெயர் : இல்லை
5. புதிதாக இடப்பட்ட பெயர் : பாவுலு பெரேரா மாவத்தை
6. வீதியின் விபரம் :

(i) **வீதியின் தொடக்கம்.-**
இடது பக்கம் : மாலபே பொத்துஅராவ ஸ்ரீ சுபோதாராம வீதியில் 21/47ஏ ஆம் இலக்கமுடைய ஆதனம்.
வலது பக்கம் : மாலபே பொத்துஅராவ ஸ்ரீ சுபோதாராம வீதியில் 21/48 ஆம் இலக்க ஆதனம்.

(ii) **வீதியின் முடிவு .-**
இடது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் 21/43 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் 21/43 ஏ ஆம் இலக்கமுடைய ஆதனம்

4-774/1

---

## கடுவெல மாநகர சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 71 (1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி ''சமனல உயன'' என பெயரிடப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

லேகா கீதாஞ்சலி,
மாநகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.

**அட்டவணை**

1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : கடுவெல மாநகர சபை
2. மாவட்டம் : கொழும்பு
3. கிராம அலுவலர் பிரிவு : 488 - கொரதொட்ட
4. வீதியின் தற்போதைய பிரிவு : இல்லை
5. புதிதாக இடப்பட்ட பெயர் : சமனல உயன

6. வீதியின் விபரம் :

(i) **வீதியின் தொடக்கம்.-**

இடது பக்கம் : கொரதொட்ட மெனிகாகார வீதியில் 80 ஆம் இலக்க ஆதனம்.

வலது பக்கம் : கொரதொட்ட மெனிகாகார வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய வீடு

(ii) **வீதியின் முடிவு .-**

இடது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் 76/48 ஆம் இலக்க ஆதனம்.

வலது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் 76/65 ஆம் இலக்க ஆதனம்.

4-774/2

---

**கடுவெல மாநகர சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 71 (1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் விடயத்துறைக்கு பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதி "வேரகல மாவத்தை" என பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

லேகா கீதாஞ்சலி,
மாநகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.

**அட்டவணை**

1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : கடுவெல மாநகர சபை
2. மாவட்டம் : கொழும்பு
3. கிராம அலுவலர் பிரிவு : 494/ஏ ஹோகந்தர கிழக்கு
4. வீதியின் தற்போதைய பெயர் : இல்லை
5. புதிதாக இடப்பட்ட பெயர் : வேரகல மாவத்தை
6. வீதியின் விபரம் :

(i) **வீதியின் தொடக்கம்.-**

இடது பக்கம் : ஹொரஹேன பிரதான வீதியின் இடதுபக்கத்தில் அமைந்துள்ள வெற்றுக் காணி.

வலது பக்கம் : ஹொரஹேன பிரதான வீதியின் இடதுபக்கத்தில் 203 ஆம் இலக்க ஆதனம்.

(ii) **வீதியின் முடிவு .-**

இடது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் இடதுபக்கத்தில் அமைந்துள்ள வெற்றுக்காணி.

வலது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் 197/5 ஆம் இலக்க ஆதனம்.

4-774/3

---

**கடுவெல மாநகர சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 71 (1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதி "பீல்ட் எஜ் கார்டன்ஸ்" என பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகிறது.*

லேகா கீதாஞ்சலி,
மாநகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.

**அட்டவணை**

1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : கடுவெல மாநகர சபை
2. மாவட்டம் : கொழும்பு
3. கிராம அலுவலர் பிரிவு : 488 கொரதொட்டை
4. வீதியின் தற்போதைய பிரிவு : இல்லை
5. புதிதாக இடப்பட்ட பெயர் : பீல்ட் எஜ் கார்டன்ஸ்
6. வீதியின் விபரம் :

(i) **வீதியின் தொடக்கம்.-**
இடது பக்கம் : வதுரன்முல்ல ஸ்ரீ சுமனதிஸ்ஸ மாவத்தையின் இடதுபக்கத்தில் 33 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : வதுரன்முல்ல ஸ்ரீ சுமனதிஸ்ஸ மாவத்தையின் இடதுபக்கத்தில் 37 ஆம் இலக்க ஆதனம்.

(ii) **வீதியின் முடிவு .-**
இடது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் இடதுபக்கத்தில் 33/2 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் வலதுபக்கத்தில் அமைந்துள்ள 33/7 ஆம் இலக்க ஆதனம்

7-774/4

---

**கடுவெல மாநகர சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 71 (1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வீதி "ரஜமல்வத்த 6 ஆம் ஒழுங்கை" என பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

லேகா கீதாஞ்சலி,
மாநகர ஆணையாளர்,
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.

**அட்டவணை**

1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : கடுவெல மாநகர சபை
2. மாவட்டம் : கொழும்பு
3. கிராம அலுவலர் பிரிவு : 492/ட, ரஜமல்வத்த
4. வீதியின் தற்போதைய பெயர் : இல்லை
5. புதிதாக இடப்பட்ட பெயர் : ரஜமல்வத்த 6 ஆம் ஒழுங்கை
6. வீதியின் விபரம் :

(i) **வீதியின் தொடக்கம்.-**
இடது பக்கம் : பத்தரமுல்ல ரஜமல்வத்த வீதியின் 89 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : பத்தரமுல்ல ரஜமல்வத்த வீதியின் 89/56 ஆம் இலக்க ஆதனம்.

(ii) **வீதியின் முடிவு .-**
இடது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் இடதுபக்கத்தில் 89/35 ஆம் இலக்க ஆதனம் மற்றும் அசோக மாவத்தையின் 18 ஆம் இலக்க ஆதனம்.
வலது பக்கம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியின் வலதுபக்கத்தில் 89/47 ஆம் இலக்க ஆதனம் மற்றும் அசோக மாவத்தையின் 24 ஆம் இலக்க ஆதனம்.

4-774/5

**ஆணமடுவ பிரதேச சபை**

உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணை விதி) சட்டம்

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப்படி ஆணமடுவ பிரதேச சபையின் செயலாளர் லங்சகார முதியன்சேலாகே சந்திரிகா சமந்தி நிர்மலா குமாரி கலபடகம ஆகிய நான்-*

- *பிரதேச சபைகளில் குழு கூட்டத்தினை ஏற்படுத்தல், கூட்டம் நடாத்தல் பற்றிய துணை விதி,*
- *அமர்வு அறிக்கை மற்றும் தகவல்கள் சமர்ப்பித்தல் பற்றிய துணை விதி,*
- *கல்லறைகளை முறைப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் கட்டணம் அறவிடல் பற்றிய துணை விதி,*
- *இறுதிகிரிகை சேவை வழங்கும் நிலையத்தின் நடவடிக்கைகளை நிருவகித்தல், முறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டணம் அறவிடலுக்கான துணைவிதி*

*ஆகிய துணை விதிகள். ஆணமடுவ பிரதேச சபை அதிகாரப் பிரிவில் செயற்படுத்தப்படவேண்டும் என்று 2016.01.06 ஆந் திகதி தீர்மான இலக்கம் 107 இற்கான தீர்மானத்தின் கீழ் என்னால் தீர்மானிக்கப்பட்டது என்று இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*எல். எம். சீ. எஸ். என். கே. கலபடகம,*
*செயலாளர் மற்றும் செயல்கள்,*
*கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்,*
*ஆணமடுவ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ஆணமடுவ,*
*2016, சனவரி 06.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைவான ஏற்பாடு) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனம் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதி) சட்டத்தின் (2) ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தின், உள்ளூராட்சிமன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் தொகுக்கப்பட்ட 2015.08.31 ஆந் திகதிய 1930/6 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் பிரசுரிக்கப்பட்டதும்,*

- *பிரதேச சபைகளில் குழு கூட்டத்தினை ஏற்படுத்தல், கூட்டம் நடாத்தல் பற்றிய துணை விதி,*
- *அமர்வு அறிக்கை மற்றும் தகவல்கள் சமர்ப்பித்தல் பற்றிய துணை விதி,*
- *கல்லறைகளை முறைப்படுத்தல், நிருவகித்தல் மற்றும் கட்டணம் அறவிடல் பற்றிய துணை விதி,*
- *இறுதிகிரிகை சேவை வழங்கும் நிலையத்தின் நடவடிக்கைகளை நிருவகித்தல், முறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டணம் அறவிடலுக்கான துணைவிதி*

*ஆகிய துணை விதிகள் நான்கு (04) 1957 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன துணை விதியில் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி ஆணமடுவ பிரதேச சபை அதிகாரப் பிரிவுகளுக்காக செயற்படுத்தப்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய நான் தீர்மானிக்கின்றேன்.*

*4-796/1*

---

**ஆணமடுவ பிரதேச சபை**

உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணை விதி) சட்டம்

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப்படி ஆணமடுவ பிரதேச சபையின் செயலாளர் லங்சகார முதியன்சேலாகே சந்திரிகா சமந்தி நிர்மலா குமாரி கலபடகம ஆகிய நான், பிரதேச சபை*

*திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துணை விதியினை ஆணமடுவ பிரதேச சபைக்காக செயற்படுத்தப்பட வேண்டும் என்று 2016.02.17 ஆந் திகதி 118 தீர்மான இலக்கத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டது என்று இத்துடன் நான் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

எல். எம். சீ. எஸ். என். கே. கலபடகம,
செயலாளர் மற்றும் செயல்கள்,
கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்,
ஆணமடுவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஆணமடுவ,
2016, பெப்புருவரி 17

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநிலைச் சட்டத்தின்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் (2) ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தின், உள்ளூராட்சிமன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சரிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி, வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2015.09.25 ஆந் திகதிய 1933/40 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் வெளியிடப்பட்டதும், பிரதேச சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துணை விதியினை, 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை துணை விதிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குகளுக்கமைய ஆணமடுவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக செயற்படுத்தப்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய உரிய சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுப்படி நான் தீர்மானிக்கின்றேன்.*

4-796/2

---

**சிலாபம் பிரதேச சபை**

பொது ஒழுங்கைகளை அறிவித்தலுக்கு உட்படுத்துதல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி வடமேல் மாகாணத்தின் புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள கீழ் காணப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஒழுங்கைகள் சிலாபம் பிரதேச சபைக்குரிய ஒழுங்கைகளாக அறிவித்தலுக்கு உட்படுத்துவதாக இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.*

ஆர். ஜே. ஏ. சாந்தி மாலா ஹேமலதா,
செயலாளர்,
சிலாபம் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
சிலாபம்,
2016, மாச்சு 3.

**அட்டவணை**

| பாதையின் பெயர் | பாதை ஆரம் பிக்குமிடம் | பாதை முடியுமிடம் | நீளம் (கி. மீ.) | சாதாரண அகலம் (மீற்றர்) | எல்லை: பாதையின் வலது பக்கம் | எல்லை: பாதையின் இடது பக்கம் | வரைபட இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| சேனாநாயக்க ஆராம மாவத்தை | பழைய நகரம் | சேனாநாயக்க ஆராமய | 0.30 | 9.0 | 1. டீன் ஸ்டோர்ஸ் | 1. டபிள்யூ. எஸ். மெண்டிஸ் | பீ.எஸ்.53 |
| | | | | | 2. எம். தஸீம் | 2. என். ஜீ. கே. மெண்டிஸ் | பீ.எஸ் 53 |
| | | | | | 3. டபிள்யூ. ஜே. ஜே. எம். விஜேகுணரத்ன | 3. எச். கிரேட்டா பெரேரா | பீ.எஸ் 53 |
| | | | | | 4. டபிள்யூ. ஜே. ஜே. எம். விஜேகுணரத்ன | 4. எச். டெக்லா பெரேரா | பீ.எஸ் 53 |
| | | | | | 5. டபிள்யூ. ஜே. ஜே. எம். விஜேகுணரத்ன | 5. எச். லெனாட் பெரேரா | பீ.எஸ் 53 |
| | | | | | 6. ரீ. எம். எம். குணசேகர | 6. எச். பீ. மலலசேகர | பீ.எஸ் 53 |

| பாதையின் பெயர் | பாதை ஆரம் பிக்குமிடம் | பாதை முடியுமிடம் | நீளம் (கி. மீ.) | சாதாரண அகலம் (மீற்றர்) | எல்லை பாதையின் வலது பக்கம் | பாதையின் இடது பக்கம் | வரைபட இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 7. ஈ. நிலானி சில்வா | 7. டபிள்யூ. ரி. டீ. எஸ். பர்ணாந்து | பீ.எஸ் 53 |
| | | | | | 8. ரீ. ரீ. எம். குணசேகர | 8. சேனாநாயக்க ஆராமய | பீ.எஸ் 53 |
| | | | | | 9. எஸ். ஏ. எல். என்டன் சேனாரத்ன | | பீ.எஸ் 53 |
| | | | | | 10. ஜீவா ஜுட் நிஷாந்த | | பீ.எஸ் 53 |
| | | | | | 11. ஆர். அஜித் மெண்டிஸ் | | பீ.எஸ் 53 |
| | | | | | 12. டீ. எம். ஷெல்டன் திசாநாயக்க | | பீ.எஸ் 53 |
| | | | | | 13. ஈ. சிறினி சேனாநாயக்க | | பீ.எஸ் 53 |
| | | | | | 14. டீ. எம். ஷெல்டன் திசாநாயக்க | | பீ.எஸ் 53 |
| | | | | | 15. ஏ. எஸ். மாக்கஸ் பெரேரா | | பீ.எஸ் 53 |
| பிரஞாதிலக்க திஸ்ஸ மாவத்தை | சேனாநாயக்க ஆராம வீதி | பெரேரா மாவத்தை | 0.60 | 8.0 | 1. ரீ. எம். எம். குணசேகர | 1. ஈ. நிலானி சில்வா | பீ. எஸ் 54 |
| | | | | | 2. எஸ். எம். ஏ. பிரேமலால் | 2. சிலாபம் பிரதேச சபை | பீ.எஸ் 54 |
| | | | | | 3. டீ. எம். சமிந்த சில்வா | 3. இந்து ஆலயம் | பீ.எஸ் 54 |
| | | | | | 4. அல் மிஸ்பா மகா வித்தியாலயம் | 4. இந்து ஆலயம் | பீ.எஸ் 54 |
| | | | | | 5. டபிள்யூ. எஸ். எம். அபேசேகர | 5. சேனாநாயக்க ஆராம | பீ.எஸ் 54 |
| | | | | | 6. டபிள்யூ. ஜே. ஈ. எம். அபேசேகர | 6. எம். ரவிந்து சொய்ஸா | பீ.எஸ் 54 |
| | | | | | 7. டபிள்யூ. ஆர். டி சில்வா | 7. ஏ. காமில் மரிக்கார் | பீ.எஸ் 54 |
| | | | | | 8. ஏ. காமில் மரிக்கார் | 8. க்லெமண்ட் | பீ.எஸ் 54 |
| | | | | | 9. பி. கோதாகொட | 9. சித்தி சஹீரா | பீ.எஸ் 54 |
| | | | | | 10. எம். எஸ். எம். மௌலானா | 10. எச். சமன் ரவீந்திர | பீ.எஸ் 54 |
| | | | | | 11. க்லெமண்ட் | 11. டயலொக் நிறுவனம் | பீ.எஸ் 54 |
| | | | | | 12. கிரேஷன் பெரேரா | 12. நவரத்ன உரிமையாளர் | பீ.எஸ் 54 |
| | | | | | 13. எச். அசோக பெரேரா | 13. திலக் பத்திரன | பீ.எஸ் 54 |
| | | | | | 14. ரீ. ஏ. த சில்வா | 14. டெனிசன் பெரேரா | பீ.எஸ் 54 |
| | | | | | | 15. நிலந்தியும் இன்னும் ஒருவரும் | பீ.எஸ் 54 |
| | | | | | | 16. நிலந்தி | பீ.எஸ் 54 |
| | | | | | | 17. பீ. பீ. புஷ்பகுமார | பீ.எஸ் 54 |
| ஹிஜ்ரா மாவத்தை | பழைய நகரம் | மாதம்பை வைத்தியசாலை | 0.60 | 6.0 | 1. எம். கே. ரீ. பஜரியா | 1. ஐ. என். நிஸார் | பீ.எஸ் 51 |
| | | | | | 2. முஹம்மது றிஸான் | 2. ஐ. சிபாயா | பீ.எஸ் 51 |
| | | | | | 3. எம். சீ. எம். றிம்ஸான் | 3. எம். எச். மரிக்கார் | பீ.எஸ் 51 |
| | | | | | 4. எஸ். லாபிர் | 4. ஏ. சுபியான் | பீ.எஸ் 51 |
| | | | | | 5. ஹம்ஷுல் ஷகீலா | 5. எஸ். எம். அஸாத் | பீ.எஸ் 51 |
| | | | | | 6. ராஹிலா உம்மா | 6. எம். எஸ். எம். அஸனூன் | பீ.எஸ் 51 |
| | | | | | 7. மில்டன் பெரேரா | 7. ஏ. சீ. எம். ரபீக் | பீ.எஸ் 51 |
| | | | | | 8. விமலாவதி | 8. முஹம்மது நசீம் | பீ.எஸ் 51 |
| | | | | | 9. பிரியதர்ஷன | 9. பாத்திமா றிஸானா | பீ.எஸ் 51 |
| | | | | | | 10. எம். சுஹையார் | பீ.எஸ் 51 |
| | | | | | | 11. எம். எல். சித்தி வசீலா | பீ.எஸ் 51 |
| | | | | | | 12. எம். ஐ. இப்றாஹிம் | பீ.எஸ் 51 |
| | | | | | | 13. ஏ. எம். ஹவுப் | பீ.எஸ் 51 |
| | | | | | | 14. ஏ. கே. அஸ்வர் | பீ.எஸ் 51 |
| | | | | | | 15. என். எம். சமீர் | பீ.எஸ் 51 |
| | | | | | | 16. நவாஸ்தீன் | பீ.எஸ் 51 |
| | | | | | | 17. எம். ஏ. எம். முஹம்மது | பீ.எஸ் 51 |

| பாதையின் பெயர் | பாதை ஆரம் பிக்குமிடம் | பாதை முடியுமிடம் | நீளம் (கி. மீ.) | சாதாரண அகலம் (மீற்றர்) | எல்லை பாதையின் வலது பக்கம் | எல்லை பாதையின் இடது பக்கம் | வரைபட இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 18. எஸ். ஏ. டேவிட் | பீ.எஸ் 51 |
| | | | | | | 19. சந்தன | பீ.எஸ் 51 |
| தர்கா மாவத்தை | பழைய நகரம் | சந்திரிக் சில்வா மாவத்தை | 0.25 | 6.0 | 1. பள்ளித்தோட்டம் | 1. பி. எம். கிஸ்மத் | பீ.எஸ் 52 |
| | | | | | 2. எம். எஸ். எம். மரிக்கார் | 2. பி. எம். கிஸ்மத் | பீ.எஸ் 52 |
| | | | | | 3. ஏ. சாரா உம்மா | 3. எம். எப். எம். அரபாத் | பீ.எஸ் 52 |
| | | | | | 4. ஜே. எம். இபாம் | 4. எஸ். ஐ. பதுர்தீன் | பீ.எஸ் 52 |
| | | | | | 5. எம். கரீஸ் | 5. ஜே. எம். ஜபீனா | பீ.எஸ் 52 |
| | | | | | 6. பீ. எம். ஹரீஸ் | 6. எம். எஸ். எம். ராஜாப்தீன் | பீ.எஸ் 52 |
| | | | | | 7. சம்சுல் ஹனீதா | 7. எஸ். எச். எம். ஜிப்ரி | பீ.எஸ் 52 |
| | | | | | 8. பாரூக், சுல்தான் மரிக்கார் | 8. ஆர். எம். நஸ்ரீன் | பீ.எஸ் 52 |
| | | | | | 9. எச். எம். றஹுமான் கனி | 9. எஸ். எம். உவைஸ் | பீ.எஸ் 52 |
| | | | | | 10. எஸ். எச். எம். ஹுசைன் | 10. எஸ். என். எம். பேகம் | பீ.எஸ் 52 |
| | | | | | 11. எம். எஸ். எம். அஸ்கர் | 11. சல்ஹா நாச்சியா | பீ.எஸ் 52 |
| | | | | | 12. முஹம்மது சியாம் | 12. கே. ஸம்ஸுல் ஹனீதா | பீ.எஸ் 52 |
| | | | | | 13. முஹம்மது காஸிம் | 13. சுல்தான் மரிக்கார் | பீ.எஸ் 52 |
| | | | | | 14. எம். எம். ருஸ்தி | 14. நமீர் | பீ.எஸ் 52 |
| | | | | | 15. ஜே. எம். கருணாரத்ன | 15. எஸ். எம். நஸார் | பீ.எஸ் 52 |
| | | | | | | 16. எம். எஸ். எம். றிஸ்மி | பீ.எஸ் 52 |
| | | | | | | 17. முஹம்மது சதன் | பீ.எஸ் 52 |
| | | | | | | 18. ஏ. எம். தாஹிர் | பீ.எஸ் 52 |
| | | | | | | 19. முஹம்மது நஸ்லிம் | பீ.எஸ் 52 |
| | | | | | | 20. அஸ்லம் | பீ.எஸ் 52 |
| சந்திரிக் சில்வா மாவத்தை | தனிவெல்ல வீதி | அம்ப செவன | 0.70 | 7.5 | 1. எம். லலித் த சில்வா | 1. சுகாதாரத் திணைக்களம் | பீ.எஸ் 50 |
| | | | | | 2. எம். லலித் த சில்வா | 2. எச். வீ. ஆர். பீரிஸ் | |
| | | | | | 3. ரீ. சோமரத்ன த சில்வா | 3. என். தனுஜ மெண்டிஸ் | |
| | | | | | 4. டீ. எம். சமிந்த த சில்வா | 4. எம். தனுஷ சொய்ஸா | |
| | | | | | 5. டீ. எம். சமிந்த த சில்வா | 5. எம். ரவிந்து சொய்ஸா | |
| | | | | | 6. எஸ். ஏ. ஆர். சந்திரசிறியும் எச். எல். மைத்திரிபாலவும் | 6. டபிள்யூ. ஆர். த சில்வா | |
| | | | | | 7. சேனாநாயக்க ஆராமய | 7. எல். எம். நௌபர் | |
| | | | | | 8. டபிள்யூ. ஜே. ஈ. எம். அபேசேகர | 8. ஜே. செய்னுல் ஆப்தீன் | |
| | | | | | 9. அப்துல் காதர் | 9. அப்துல் ஷுகூர் | |
| | | | | | 10. ரீ. அமர்தீன் | 10. இஸ்லாஹிய்யா அரபிக் கல்லூரி | |
| | | | | | 11. ஏ. டபிள்யூ. எம். காஸிம் | 11. செய்யது பதுர்தீன் | |
| | | | | | 12. எம். பீ. எம். இக்பால் | 12. எம். லாபிர் | |
| | | | | | 13. எம். எச். எம். றிஸ்வான் | 13. ஜே. இஷாக்கு | |
| | | | | | 14. எம். பதாவுல்லா | 14. ஜனுன் நபீரா | |
| | | | | | 15. கார்மெல் | 15. எஸ். எம். ஸ்வைஸ்தீன் | |

| பாதையின் பெயர் | பாதை ஆரம் பிக்குமிடம் | பாதை முடியுமிடம் | நீளம் (கி. மீ.) | சாதாரண அகலம் (மீற்றர்) | எல்லை — பாதையின் வலது பக்கம் | எல்லை — பாதையின் இடது பக்கம் | வரைபட இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 16. நௌஷாத் | 16. நஸார், எஸ். எம். நஸ்லீன் | |
| | | | | | 17. அஜ்வத் | 17. ஸப்ராஸ் | |
| | | | | | 18. ஜே. எம். கருணாரத்ன | 18. என். எம். ரூபில் | |
| | | | | | 19. எச். எம். அஷ்ரத் | 19. பாத்திமா சியாரா | |
| | | | | | 20. எஸ். எம். மௌசூனா | 20. அஜந்த சில்வா | |
| | | | | | 21. எமலின் குணசிங்ஹ | 21. ஏ. நேபாலி பெரேரா | |
| | | | | | 22. அஸங்க சில்வா | 22. தெதின் | |
| | | | | | 23. அஜந்த சில்வா | | |

4-887

---

## நாரம்மல பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணை விதி) சட்டம்

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரப்படி நாரம்மல பிரதேச சபையின் செயலாளர் எச். ஜே. எம். எம். எஸ். ஜயசுந்தர ஆகிய நான், பிரதேச சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துணை விதியினை நாரம்மல பிரதேச சபைக்காக செயற்படுத்தப்பட வேண்டும் என்று 2016.01.20 ஆந் திகதி 538 ஆம் தீர்மான இலக்கத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டது என்று இத்துடன் நான் அறிவித்தல் விடுக்கின்றேன்.

எச். ஜே. எம். எம். எஸ். ஜயசுந்தர,
செயலாளர் மற்றும் செயல்கள்,
கடமைகளை நிறைவேற்றுகின்ற உத்தியோகத்தர்,
நாரம்மல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நாரம்மல,
2016, மாச்சு 31.

### தீர்மானம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநிலைச் சட்டத்தின்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை (தீர்மானிக்கப்பட்ட துணை விதி) சட்டத்தின் (2) ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின் கீழ் வடமேல் மாகாணத்தின், உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரிடத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி, வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2015.09.25 ஆந் திகதிய 1933/40 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் (அதிவிசேட) வர்த்தமானியில் IV (அ) ஆம் பகுதியில் வெளியிடப்பட்டதும் பிரதேச சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய துணை விதியினை, 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபை துணைவிதிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குகளுக்கமைய நாரம்மல பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக செயற்படுத்தப்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய உரிய சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுப்படி நான் தீர்மானிக்கின்றேன்.

4-907

# துணை விதிகள்

## நிக்கவெரட்டிய பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சட்டம்*
*(துணை விதி அமுலாக்கல்)*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் உபபிரிவு 3, 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க சட்டம் பிரிவு 3 உடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் நிக்கவெரட்டிய பிரதேச சபையின் செயலாளர் எதிரிசிங்க ஆரச்சிலாகே சோமரத்ன ஆகிய நான், (துணை நிலைச்சட்டம் அமுலாக்கல்)*

**திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பான மாகாண சபை துணை நிலைச்சட்டம்**

*இதன் அடிப்படையில் திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பான மாகாண சபை துணை 1270 நிலைச்சட்டத்தினை 2016.02.12 ஆந் திகதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் கீழ் நிகவெரட்டிய பிரதேச சபையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.*

*ஈ. ஏ. சோமரத்ன,*
*செயலாளர், அதிகாரம் மற்றும்*
*விவகாரங்களை அமுல்படுத்தும் அதிகாரி,*
*நிக்கவெரட்டிய பிரதேச சபை.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மாகாண சபை சட்டம் பிரிவு 9 உப பிரிவு 3 இன் அடிப்படையில் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் நான் எடுத்த தீர்மானம்,*

** திண்ம கழிவு முகாமைத்துவம் தொடர்பான மாகாண சபை துணை நிலைச்சட்டம்*

*குறித்த தீர்மானம் இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு IV (அ) வர்த்தமானி 1933/40 இன் ஊடாக 2015.09.25 ஆந் திகதிய வடமேல் மாகாண, மாகாண சபைகள் அமைச்சினூடாக 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு (2) உப பிரிவு 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க சட்டத்தின்படி பிரிவு 2 உப பிரிவு 1 உடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டும்.*

## நிக்கவெரட்டிய பிரதேச சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய இடைநிலைச்சட்டம்

*1. இந்தச் சட்டம் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் பற்றிய இடைநிலைச் சட்டம் என்று அறிமுகப்படுத்தப்படும்.*

*2. நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் பிரசித்த இடங்கள், பொது சூழல்களில், வீதிகள், ஒழுங்கைகளில் குவிக்கப்படுகின்ற திண்மக் கழிவுப் பொருட்களை வேறுபடுத்தல், ஒன்று சேர்த்தல், களஞ்சியப்படுத்தல், இடமாற்றம் செய்யப்படும் இடங்களை செயற்படுத்தல் மற்றும் கொண்டு செல்லுதல், பரிமாற்ற நிலையங்களை அமைத்தல் கொண்டு நடாத்தலும் அந்த பொருட்களை வெளியேற்றல் சம்பந்தமான அலுவல்களையும் அந்த அலுவல்களுக்கு ஒத்த அலுவல்களை முறைப்படுத்தலும், மேற்பார்வை செய்தலும், பரிசீலித்தலும் நிர்வகித்தலுக்காக இந்த இடைநிலைச் சட்டம் விதிக்கப்படுகின்றது.*

*3. நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள எல்லா சூழலிலும் கழிவுப் பொருள்களற்ற, சுகாதார முறையிலும் அழகுற சூழலை வைத்துக்கொள்ளல் அந்த உரிமையாளர்களின் அல்லது குடியிருப்போரின் கடமையாகும்.*

*4. நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள எல்லா சூழலினதும் உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் சூழலில் குவிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்தல், வகைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், கொண்டு செல்லல் மற்றும் வெளியேற்றல் நடைபெறுதல் வேண்டும். இல்லாதுவிடின் இந்த இடைநிலைச் சட்டதிட்டங்களுக்கமைய மேற்கொள்ள வேண்டும்:-*

5. (i) *எல்லா சூழலினதும் உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் தமது சூழலில் குவிக்கப்படுகின்ற திண்மக் கழிவுப் பொருட்களை கூட்டி அல்லது வேறு முறையினை உபயோகித்து அல்லது எந்நாளும் அல்லது அதற்கு குறைந்த காலத்தினுள் ஒன்று சேர்த்தல் செய்தல் வேண்டும்.*

(ii) *எல்லா உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் இந்த இடைநிலைச் சட்டத்தின் முதலாவது பந்தியின் சட்டத்தின் கீழ் ஒன்று சேர்க்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை இலக்கம் 8 தொடக்கம் 20 வரையிலான பிரிவுகளுக்கு அமைய பிரித்தல் வேண்டும். அல்லாது விடின் அவ்வாறு செய்வதற்கு தூண்டுதல் வேண்டும்.*

(iii) *உரிமையாளர்களினால் அல்லது குடியிருப்பாளர்களினால் கழிவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தல் அல்லது விடுவித்தலுக்காக உபயோகிக்கப்படுகின்ற ஏதாவதொரு உறை, பெரிய பாத்திரம் அல்லது வேறு ஏதாவதொரு தாங்கி இந்த இடைநிலைச் சட்டத்தின் பிரிவுகளின் செயலுக்காக உகந்த முறையில் கொண்டு நடாத்தல் வேண்டும்.*

(iv) *நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் 5 (1) ஆம் பிரிவிற்கு அமைய ஒன்று சேர்க்கப்படுகின்ற குப்பைகளை பொறுப்பேற்பதற்காக நிகவெரட்டிய*

பிரதேச சபையினால் ஆரம்பத்திலே அறிவித்த பின்பு குறிப்பிட்ட சேவையினை கொண்டு நடாத்த வேண்டிய துடன் அதன் (1) ம் பிரிவில் குறிப்பிடப்பட்டவாறே ஒன்று சேர்க்கப்பட்ட கழிவுப் பொருட்கள் நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்பட்டு பிரசித்தம் செய்யப்பட்ட, நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நடை முறைப்படுத்தப்படுகின்ற கழிவுப்பொருட்களை ஒன்று சேர்க்கும் செயற்பாட்டிற்கு நேரசூசிப்படியும் உரிமையாளர் அல்லது குடியிருப்பாள ரின் பொறுப்படைத்தல் வேண்டும்.

(v) உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்களின், விருந்தினர்களின் அல்லது அயல்வீடுகளில் உள்ள வர்களின் சுகாதாரத்திற்கு அல்லது அந்த பிரதேசத்தில் சுகாதார பாதுகாப்பிற்கு மிரட்டலாக அல்லது பீடை அளிக்கக்கூடிய வகையில் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்தல் அல்லது களஞ்சியப்படுத்தல் அல்லது வெளியேற்றலாகாது.

6. (i) எவர் ஒருவரினாலும் வீதிக்கு, பாதைக்கு, ஒழுங்கைக்கு, குறுக்குத் தெருவிற்கு அல்லது பொது இடத்திற்கு அல்லது சூழலுக்கு அல்லது வடிகாலுக்கு நீர் ஓடைக்கு, பாதுகாப்பு இடங்களுக்கு அல்லது நீர் நிலையங்களுக்கு அல்லது கடற்கழியிற்கு அல்லது நீர் ஊற்றுகளுக்கு அல்லது கடலுக்கு கழிவுப் பொருட்களை வெளியேற்றக் கூடாது;

(ii) எவர் ஒருவரினாலும் நிகவெரட்டிய பிரதேச சபை எல்லை யினுள் திறந்த வெளிகளில் தீங்கு ஏற்படும் வகையில் கழிவுப்பொருட்களை தீயிடலாகாது;

(iii) எந்தவொரு உரிமையாளரும் அல்லது குடியிருப்பாளர் களும் 7 ஆம் பந்தியின் ஒழுங்குகளுக்கமைய கழிவுப் பொருட்களை விடுவித்தல், திருத்தல், முறைப்படுத்தல் வெளியேற்றலுக்காக அனுமதியினைப் பெற்றுக்கொள்வ தற்கான சந்தர்ப்பத்தில் அவ்வாறு அனுமதி பெறுவதற்கு இயலாத போது அவருக்கு அந்த கழிவுப் பொருட்களையும் அதிகாரமுள்ள கழிவுப்பொருள் ஒன்று சேர்ப்பவருக்கு பொறுப்படைக்க முடியும்.

(iv) 7 ஆம் பிரிவின் ஒழுங்குகளின் கீழ் விடுவித்தல், திருத்தல் முறைப்படுத்தல் வெளியேற்றப்படாத கழிவுப் பொருட் களை மேலே 6 (iii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு அதிகாரமுள்ள கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவரினால் ஒன்று சேர்க்கப்பட்ட கழிவுப்பொருள் வகைகளை இந்த இடைநிலைச் சட்டத்தின் பந்திகளின் சட்டத்திட்டங்களுக்கமைய வெளியேற்றப்படல் வேண்டும்.

7. (i) ஏதாவதொரு சூழலில் உள்ள உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பற்றி தவிர கழிவுப்பொருட்களை அந்த சூழலினுள்ளேயே வெளியேற்றல் வேண்டும்:-

(அ) நிகவெரட்டிய பிரதேச சபையினால் அவ்வாறான கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்கு தடை செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில்;

(ஆ) நிகவெரட்டிய பிரதேச சபையினால் குறித்து அறிவிக்கப்பட்டுள்ள கழிவுப்பொருட்கள்.

(ii) சூழலின் உரிமையாளர்களினால் அல்லது குடியிருப் பாளர்களினால் அனுமதிக்கப்பட்ட திட்டத்திற்கு மற்றும் தரத்திற்கு அமைய கட்டமைக்கப்பட்ட ஏதாவதொரு எரியூட்டியில் அல்லது வெதுப்பகத்தில் கழிவுப் பொருட்களை தீ இடலாம். இல்லாதுவிடின் செயலாளரி னால் அனுமதிக்கப்பட்ட முறைமையில் கழிவுப்பொருட் களை சீர்செய்தல், அமைத்தல் அல்லது புதைக்க முடியும்;

(iii) உரிமையாளர்களினால் அல்லது குடியிருப்பாளர் களினால் ''சேதனப் பசளை உருவாக்கும் தாங்கி'' க்காக செயலாளரிடத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டால் அந்த உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு அந்த சேதனப் பசளை உருவாக்கும் தாங்கி கொண்டு நடாத்துவதற்காக போதியளவு இடவசதியின் சூழலினுள் இருக்கு மாயின், செயலாளர் சேதனப் பசளை உருவாக்கும் தாங்கிகளின் ஆகுசெலவில் ஒருபகுதி அல்லது மொத்தமாக அல்லது சாதாரணமாக பெற்றுக் கொடுத்து அந்த சேதனப்பசளை உருவாக்கும் தாங்கிகளை உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு வழங்க முடியும்;

(iv) உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் சூழலில் ஒன்று சேர்க்கப்படுகின்ற ''வீட்டுத் தோட்ட கழிவுப் பொருட்களை'' இயன்றளவு உரிய சூழலினுள்ளேயே இந்த இடைநிலைச் சட்டதிட்டங்களுக்கமைய வெளியேற்று வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பின்பு மீதியாகின்ற வீட்டுத்தோட்ட கழிவுப்பொருளாயின் அவை வெளியேற்றுவதற்குள்ள கழிவுப்பொருட்களின் தன்மை யினை கவனத்தில் கொண்டு நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படு கின்றவாறு உரிய கட்டணத்தை செலுத்துவதன் மூலம் பிரதேசத்தின் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்ப வருக்கு பொறுப்படைத்தல் வேண்டும்;

(v) வீதி அல்லது ஒழுங்கைகளில் அல்லது அவற்றிற்கு அண்மையில் அமைந்துள்ள மரங்களை அல்லது மரங் களின் பகுதிகளை வெட்டி ஒதுக்கும் யாரேனும் அவற்றை வெட்டிய உடனே அகற்றுதல் வேண்டும். அன்றேல் அகற்றுவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறும் செயற்பட முடியாது போனால் சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணத்தினை செலுத்தி நிகவெரட்டிய பிரதேச சபைக்காக குப்பைகளை ஒன்று சேர்க்கின்றவரிடத்தில் பொறுப்படைத்தல் வேண்டும்;

(vi) எவர் ஒருவர் தமது பொறுப்பிலுள்ள மிருகம், வீதியில் அல்லது ஒழுங்கையில் அல்லது பொது இடங்களில் மலசலம் கழிப்பதை தவிர்ப்பதுடன் அதனை

தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். அவ்வாறு மலசலம் கழிக்குமாயின் துணைவிதிகளுக்கு அமைய அதனை சுத்தம் செய்து வெளியேற்றுவது உரிமையாளரின் பொறுப்பாகும்;

(vii) எவர் ஒருவர் நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள ஏதாவதொரு கழிவுப்பொருள் வாகனத்திலிருந்து வீதியில், ஒழுங்கையில் அல்லது பொது இடத்திற்கு, கால்வாயிற்கு, குட்டைக்கு, நீர் நிலையத்திற்கு, பாதுகாப்பு இடங்களில் அல்லது கடற்கழியிற்கு விடுவித்தல் அல்லது அங்கு ஒன்று சேர்த்தல் செய்யலாகாது;

(viii) வீடு ஒன்று அல்லது வேறு ஏதாவதொரு கட்டிடத்தினை அமைப்பதற்கு அல்லது புனரமைப்பதற்கு வரைபு திட்டத்திற்கான அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும் எவர் ஒருவரும் அவரின் சூழலில் உருகுகின்ற திண்மக் கழிவுப் பொருள் மற்றும் வெளியேற்றப்படும் பொருட்களுக்கு செய்யப்படும் மாற்று வழி பற்றிய திட்டத்தினை அவரின் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

### வீட்டுச் சூழல்

8. (i) எல்லா உரிமையாளர்களும் அல்லது குடியிருப்பாளர்களும் சூழலை சுத்தம் செய்வதனால் ஒன்று சேர்க்கப்படுகின்ற கழிவுப்பொருட்களை கீழ் குறிப்பிடப் பட்டவாறு வகைப்படுத்தப்படல் வேண்டும்:-

(அ) வெளியேற்றப்படுகின்ற உணவுப்பொருட்களும் உயிரினங்களின் பகுதியான கழிவுகளும்;

(ஆ) மீள் உபயோகப்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்களும் மீள் சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருட்களும்;

(இ) அபாயகரமான கழிவுகள்;

(ஈ) மிருகங்களின் பிணம் அல்லது அவற்றின் உடல் பகுதிகள்;

(உ) அழியாத மீள் சுழற்சி செய்ய முடியாத வேறு கழிவுப்பொருட்கள்.

(ii) எல்லா உரிமையாளர்களும் அல்லது குடியிருப்பாளர்களும் அவ்வாறு வகைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருட்களை வெவ்வேறாக பைகளில் பாத்திரங்களில், கொள்கலன்களில், இட்டு அதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் வெளியேற்றும் வரையில் வைத்திருத்தல் வேண்டும். உணவுப்பொருட்களினதும் உயிரினங்களினதும் பகுதியான கழிவுகள் ஈரலிக்காத பொருட்களினால் அமைக்கப் பட்டதும் ஈக்கள், எலிகள் அல்லது வேறு மிருகங்களுக்கு உட்புக முடியாத வண்ணம் நன்கு மூடிய கொள்கலனில் வைத்தல் வேண்டும். இறந்த மிருங்களின் உடல் அல்லது அதன் பகுதிகளை அல்லது அதன் கழிவுப்பொருட்களை அதன் தன்மைக்கு ஏற்ப நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக காலத்திற்கு காலம் நிகவெரட்டிய பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு கட்டணம் அறவிட்டதன் பின் மாத்திரம் நிகவெரட்டிய பிரதேச சபையினால் உரிய கழிவுப் பொருட்களை பொறுப்பேற்றல் வேண்டும்;

(iii) எல்லா உரிமையாளர்களும் அல்லது குடியிருப்பாளர்களும் 8 (i) பந்தியில் (அ) மற்றும் (ஆ) களில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களின் வகைகளை அதிகாரமுள்ள கழிவுப் பொருள் ஒன்று சேர்ப்பவருக்கு பொறுப்படைக்க முடியும். அவ்வாறு இல்லாதுவிடின் நிகவெரட்டிய பிரதேச சபையினால் கழிவுப்பொருள் ஒன்று சேர்க்கும் பைகளில் இடல் வேண்டும்.

9. (i) வாடகை வீடுகளில் அதிகளவில் வாழ்கின்ற மாடிக் கட்டிடத்தில் உள்ள எல்லா உரிமையாளர்களும் அவர்களின் கழிவுப்பொருட்களை கீழ் குறிப்பிடப் பட்டவாறு தேர்ந்தெடுத்து வேறுபடுத்தல் வேண்டும்:-

(அ) அகற்றப்படுகின்ற உணவுப்பொருட்களையும் உயிரினங்களின் கழிவுப்பொருட்களையும்;

(ஆ) மீள் உபயோகப்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்களையும் மீள் சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்களையும்;

(இ) அபாயகரமான கழிவுகள்;

(ஈ) மிருகங்களின் பிணம் அல்லது அவற்றின் உடல் பகுதிகள்;

(உ) சுத்தம் செய்த பின் ஒன்றுசேர்கின்ற தூசு மற்றும் வேறு உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) 9 (i) ஆம் பந்தியில் குறித்து குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்களினால் அனுமதிக்கப்பட்ட தரங்களுக்கும் பண்புகளுக்கமைய மேலே (அ), (ஆ) மற்றும் (இ) ஆகிய உருக்களின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களுக்காக இந்த இடைநிலைச் சட்டத்தின் தரங்களுக்கு அமைய உரிய கொள்கலன்களை பெற்றுக் கொள்ள வேண்டியதுடன், அவற்றை சுத்தமாகவும் சுகாதார பாதுகாப்புடனும் கொண்டு நடாத்தல் வேண்டும்.

(iii) 9 (i) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் 9 (ii) ஆம் உப பிரிவில் ஒழுங்கு விதிகளுக்கு உடன்படாத சந்தர்ப்பத்தில் செயலாளரினால் அறிவிக்கப்படுகின்ற தினத்தில் அல்லது அதற்கு முன்பு உரிய பாத்திரம் அல்லது கொள்கலன்களை வழங்குமாறு கோர உரிமையாளருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு அதிகாரம் உண்டு. செயலாளரின் கட்டளைப்படி செயற்படுதல் உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் பொறுப்பாகும்.

(iv) கட்டிடத்தின் தரையின் அல்லது மாடியின் உரிமையாளரினால் அல்லது குடியிருப்பாளரினால் தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுப் பொருட்களை அதற்காக ஒதுக்கப் பட்டுள்ள இடங்களில் இடல் வேண்டும்;

(v) இந்த இடைநிலைச் சட்டத்தின் 9 (1) ஆம் பந்தியில் (அ) மற்றும் (ஆ) இன் கீழ் காட்டப்பட்டுள்ள வகைகளில் கழிவுப்பொருட்களை வெளியேற்றிக் கொள்வதற்காக அனுமதி பெற்றுக்கொண்டவரின் செயலாகும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட கழிவுப்பொருட்களை நிகவெரட்டிய பிரதேச சபையினால் அதற்காக விசேடமாக கொண்டு நடாத்தப்படுகின்ற இடத்தில் இடல் அல்லது அவ்வாறு நிகவெரட்டிய பிரதேச சபைக்காக குப்பைகளை ஒன்று சேர்ப்பதற்கு பொறுப்படைத்தல் வேண்டும்;

(vi) மேலே (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அபாயரகமான கழிவுகளை மேலே (அ), (ஆ), (இ) மற்றும் (ஈ) ஆகிய உருக்களின் கீழ் ஒன்று சேர்ப்பினை எவ்விதத்திலும் செய்யலாகாது. வீட்டு உரிமையாளர், வாடகையாளர் அல்லது குடியிருப்பாளர் அந்த குப்பைகளை வெளியேற்ற வேண்டியது அதற்காக விசேடமான சேவையினை கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமுள்ள குப்பைகளை ஒன்றுசேர்ப்பவராக இருத்தல் வேண்டும்.

10. (i) நிகவெரட்டிய பிரதேச சபையின் அனுமதியினை பெற்றுக் கொண்டு சேரிகளில் வாழ்கின்றவர்களின் உபயோகத் திற்காக செயலாளரினால் கழிவுப் பொருள் பாத்திரங்கள் அல்லது கொள்கலன்களை இலவசமாக வழங்குதல் சட்டரீதியானதாகும்;

(ii) எல்லா சேரி வீட்டு உரிமையாளர்கள் அல்லது குடியிருப்பாளர்களின் குடியிருப்பில் ஒன்று சேர்க்கப்படு கின்ற கழிவுப்பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தி, ஒவ்வொரு வகைக்காக ஒதுக்கப்பட்டுள்ள தமது குடியிருப்பிற்கு அருகில் உள்ள இடத்தில் பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இடல் வேண்டும்:-

(அ) அகற்றப்படும் உணவுப்பொருட்களையும் உயிரி னங்களின் கழிவுப்பொருட்களையும்;
(ஆ) மீள் உபயோகப்படுத்தக்கூடிய கழிவுப் பொருட் களும் மீள் சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்களும்;
(இ) அபாயகரமான கழிவுகள்.

(iii) இந்த இடைநிலைச் சட்டத்தில் 10 (ii) பந்தியில் (அ) மற்றும் (ஆ) இன் கீழ், காட்டப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவருக்கு அனுமதி வழங்குவதற்கு செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

**கடைகள் மற்றும் அலுவலகங்கள்**

11. (i) கடை ஒன்றின் அல்லது அலுவலகத்தின் உரிமையாளரும் அல்லது முகாமையாளரும் ஒவ்வொரு கூட்டுத் தொகுதி யிலும் ஒன்றுசேர்கின்ற கழிவுப்பொருட்களை கீழ் குறிப் பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்த வேண்டும்:-

(அ) அகற்றப்படுகின்ற உணவுப்பொருட்களையும் உயிரினங்களின் கழிவுப்பொருட்களையும்;
(ஆ) மீள் உபயோகப்படுத்தக்கூடிய கழிவுப் பொருட் களும் மீள் சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட் களும்;
(இ) அபாயகரமான கழிவுகள்;
(ஈ) சூழலினால் ஒன்றுசேர்கின்ற தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) தேர்ந்தெடுத்து ஒதுக்கப்பட்ட கழிவுப்பொருட்களை வெளியேற்றும் வரையில் வெவ்வேறாக பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டு உரிய இடத்தில் களஞ்சியப்படுத்தல் வேண்டும்.

(iii) கடையில் அல்லது அலுவலகத்தில் உரிமையாளருக்கு அல்லது முகாமையாளருக்கு இந்த இடைநிலைச் சட்டத்தில் 11 (i) (அ) (ஆ) இன் கீழ் வகைப்படுத்தியுள்ள கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி அதிகாரமுள்ள கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(iv) சில மாடிகளைக் கொண்டதும் கீழ் தள மாடிகளையுடைய கடைகள் அல்லது அலுவலகத் தொகுதியின் உரிமை யாளர் அல்லது முகாமையாளர் செயலாளரினால் அனுமதிக்கப்பட்ட தரங்களுக்கு அமைய அந்த கடை களினால் அல்லது அலுவலகங்களினால் தேர்ந்தெடுத்து ஒதுக்கப்பட்ட கழிவுப் பொருட்களை அகற்றும் வரையில் வெவ்வேறாக பாத்திரங்கள் அல்லது கொள்கலன்கள் தேவையான அளவில் வழங்க வேண்டும்.

(v) இந்த இடைநிலைச் சட்டத்தில் 11 (iv) பந்தியில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்தில் அல்லது கடையில் உரிமையாளர் தேர்ந்தெடுத்து ஒதுக்கப்பட்ட கழிவுப் பொருட்களை வெவ்வேறாக தொட்டிகளில் அல்லது கொள்கலன்களில் இடல் வேண்டும். இந்த இடைநிலைச் சட்டத்தில் 11 (i) ஆம் பந்தியில் (அ) மற்றும் (ஆ) இன் கீழ் காட்டப்பட்டுள்ள வகைகளிலான கழிவுகளை வகைப் படுத்தி அதிகாரமுள்ள கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவருக்கு ஒப்படைப்பதற்கு உரிமையாளருக்கு அல்லது முகாமையாளருக்கு உரிமை உண்டு.

(vi) அதிகாரமுள்ள கழிவுப்பொருள் ஒன்று சேர்ப்பவரினால் ஒன்று சேர்க்கப்படாத இந்த இடைநிலைச் சட்டத்தின் 11(i) ஆம் பந்தியில் (இ) உருவின் கீழ் காட்டப்பட்டுள்ள கழிவு வகைகளை நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணம் அறவிடப்பட்ட பின்பு நிக்கவெரட்டிய பிரதேச சபைக்காக குப்பைகளை ஒன்று சேர்ப்பவருக்கு ஒப்படைத்தல் வேண்டும்.

(vii) மேற்குறிப்பிடப்பட்ட (இ) உருவில் உள்ள அபாயகரமான கழிவுகள் மேலே (அ), (ஆ), (இ), (ஈ) ஆகிய உருக்களின் கீழ் உள்ள கழிவுப்பொருளுடன் எவ்விதத்திலும் கலப்படம் செய்யலாகாது. வீட்டு சூழலின் உரிமையாளர், வாடகை யாளர்கள் அந்த குப்பைகளை வெளியேற்ற வேண்டியது அதற்காக விசேடமாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள குப்பைகளை ஒன்று சேர்ப்பவருக்கேயாகும்.

(viii) அயலவர்களுக்கு அல்லது உரிய கடையில் அல்லது அலுவலகத்தில் சேவை செய்கின்றவருக்கு நோய் அல்லது சுத்தம் பற்றிய பிரச்சினை ஏற்படாதவாறு கழிவுப் பொருட்களை வெளியேற்றலும் இந்த இடைநிலைச் சட்டத்தின் விசேடமாக அறிவிக்கப்பட்டுள்ள கழிவுப் பொருள்/ பாத்திரம் அல்லது கொள்கலன்களை கொண்டு நடாத்தல் கடையின் அல்லது அலுவலகத்தின் எல்லா உரிமையாளர்களினதும் அல்லது முகாமையாளர் களினதும் பொறுப்பாகும்.

**ஹோட்டல்**

12. (i) எல்லா ஹோட்டல் உரிமையாளர்கள் அல்லது அவரினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் தமது சூழலில் ஒன்று சேர்க்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை கீழ் காணப்படுமாறு தேர்ந்தெடுத்து

ஒதுக்குதல் வேண்டும். இல்லாது விடின் அவ்வாறு செய்வதற்கு தூண்டுதல் வேண்டும்:-

(அ) உணவுக் கழிவுப்பொருட்களையும் உயிரினங்களின் கழிவுப்பொருட்களையும்;
(ஆ) மீள் உபயோகப்படுத்தக்கூடிய கழிவுப் பொருட் களும் மீள் சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட் களும்;
(இ) அபாயகரமான கழிவுகள்;
(ஈ) சூழலினால் ஒன்றுசேர்கின்ற தூசு மற்றும் உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) எல்லா ஹோட்டல் உரிமையாளர் அல்லது அவரினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட கழிவுப்பொருட்களை அகற்றும் வரையில் வெவ்வேறாக உகந்த பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இட்டு உகந்த இடத்தில் களஞ்சியப்படுத்தல் வேண்டும்.

(iii) எல்லா ஹோட்டல் உரிமையாளர் அல்லது அவரினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் ஈக்கள், எலிகள், பூச்சிகள் அல்லது வேறு மிருகங்கள் உள் நுழைவதினை தடுப்பதற்காக எல்லா உணவுக் கழிவுப்பொருட்கள் மற்றும் அகற்றப்படும் உணவுப் பொருட்களையும் உயிரினங்களின் கழிவுப்பொருட் களையும் பிளாஸ்டிக் அல்லது உலோகப் பொருளினால் அமைக்கப்பட்ட மூடியினை உபயோகித்து உரிய பாதுகாப்புடன் பாத்திரத்தில் அல்லது கொள்கலனில் இடல் வேண்டும்.

(iv) இந்த இடைநிலைச் சட்டத்தின் 12 (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள (அ) மற்றும் (இ) வகைகளிலான கழிவுப்பொருட்களை அனுமதிக்கப்பட்ட ஒன்று சேர்ப்பவருக்கு பொறுப்படைத்தல் வேண்டும்.

(v) இந்த இடைநிலைச் சட்டத்தில் 12 (iv) ஆம் பந்தியின் கீழ் பொறுப்பேற்காத (அ) மற்றும் (ஆ) உருக்களின் கீழ் விபரிக்கப்பட்ட கழிவுப்பொருட்களை சபையினால் குப்பைகளை ஒன்று சேர்ப்பதற்காக விசேடமாக வைக்கப்பட்டுள்ள பாத்திரங்களில் அல்லது கொள் கலன்களில் இடல் சட்டரீதியானதாகும்.

(vi) மேற்கூறப்பட்ட (இ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அபாயகரமான கழிவுகள் (அ), (ஆ), (ஈ) உருக்களின் கீழ் எவ்விதத்திலும் கலப்படம் செய்தல் ஆகாததுடன் வாடகை வீட்டாளர்கள் அல்லது குடியிருப்பாளர்கள் அந்த குப்பையினை வெளியேற்ற வேண்டியது அதற்காக விசேடமான சேவையினை கொண்டு நடாத்துவதற்காக அதிகாரம் வழங்கப்பட்ட குப்பைகளை ஒன்று சேர்ப்ப வருக்கே ஆகும்.

**மரக்கறி மற்றும் பழங்கள் விற்பனை நிலையங்கள்**

13. (i) எல்லா மரக்கறி மற்றும் பழங்கள் வியாபார உரிமையாளர்கள் தமது வியாபார நிலையத்தில் ஒன்று சேர்க்கப்படும் கழிவுகளை கீழே குறிப்பிடப்பட்டவாறு வகைப்படுத்தல் வேண்டும்.

(அ) மனித நுகர்விற்கு பொருத்தமற்ற மரக்கறி, பழங்கள் மற்றும் சிதைந்த கழிவுப்பொருட்கள் ;
(ஆ) மீள் உபயோகப்படுத்தக்கூடிய கழிவுப் பொருட் களும் மீள் சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருட் களும்.

(ii) இந்த இடைநிலைச் சட்டத்தின் 13 (i) பிரிவில் (அ) கீழ் வகைப்படுத்தப்படும் கழிவுப்பொருட்கள் ஈரலிக்காத பிளாஸ்ரிக் அல்லது உலோகத்தினால் அமைக்கப்பட்ட துளைகளற்ற கொள்கலனில் அல்லது கொள்கலன் களில் பொதி செய்யப்படவேண்டியதுடன் கொள்கலன் அல்லது கொள்கலன்களில் ஈக்கள், எலிகள், பூச்சிகள் அல்லது வேறு மிருகங்களுக்கு உட்புக முடியாதவாறு நன்கு மூடி வைக்க வேண்டியதுடன், மற்றைய கழிவுப்பொருட்களை உரிய பாத்திரங்களில் அல்லது கொள்கலன்களில் இடல் வேண்டும்.

(iii) இந்த இடைநிலைச் சட்டத்தின் 13 (i) ஆம் பிரிவில் (அ), (ஆ) கீழ் வகைப்படுத்தப்படும் கழிவுப்பொருட்கள் அதிகாரமுள்ள குப்பைகளை ஒன்று சேர்ப்பவருக்கு பொறுப்படைத்தல் வேண்டும்.

அவ்வாறு பொறுப் படைக்காத கழிவுப்பொருட்கள் மேற்கூறப்பட்ட (அ), (ஆ) உருவின் கீழ் விபரிக்கப்பட்டுள்ள நிகவெரட்டிய பிரதேச சபையினால் கொண்டு நடாத்துகின்ற ஒன்று சேர்ப்பவருக்கு பொறுப்படைப்ப வருக்கு பொறுப்படைத்தல் அல்லது உரிய இடத்தில் இடல் வேண்டும்.

**இறைச்சி, மீன் அல்லது முட்டை விற்பனை நிலையம்**

14. (i) உரிய அலுவலுக்காக தவிசாளரினால் அதற்குரிய ஏதாவதொரு சட்டப்படி வழங்கப்பட்ட உரிமப்பத்திரப்படி அங்கு குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் எவராவது ஒருவர் ஊன் வினைஞர் கட்டளைச்சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய அனுமதிக்கப்பட்ட மிருகங்கள் தவிர வேறு எந்த மிருகங்களையும் வெட்டலாகாது.

(ii) இறைச்சி, மீன் அல்லது முட்டை விற்பனை செய்வதற்காக உள்ள கூடாரத்தின் உரிமையாளர் அல்லது அந்த வியாபாரத்தினை கொண்டு நடாத்துகின்றவர்கள் அவர்களின் கழிவுப்பொருட்களை கீழ்க் குறிப்பிடப்பட்ட வாறு தேர்ந்தெடுத்து ஒதுக்குதல் வேண்டும்:-

(அ) மனித நுகர்விற்காக தரமற்ற மிருக உடல், உடல் பகுதிகள் மற்றும் முட்டைகள் ;
(ஆ) மீண்டும் உபயோகிக்கக்கூடிய கழிவுப்பொருளும் மீள்சுழற்சி செய்ய முடிந்த கழிவுப் பொருட்களும்.

(iii) வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்களை வெவ்வேறான பாத்திரங்களில் இடல் வேண்டும். இந்த இடைநிலைச் சட்டத்தில் 14 ஆம் பிரிவில் (ii) ஆம் உப பிரிவில் (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகள் ஈரலிப்பற்ற பாத்திரங்களில் இடவேண்டியதுடன், அந்த பாத்திரங்களுள் ஈக்கள், எலிகள், பூச்சிகள் அல்லது வேறு மிருகங்களுக்கு உட்புக முடியாதவாறு நன்கு மூடி வைக்க வேண்டும்.

(iv) இந்த இடைநிலைச் சட்டத்தில் 14 (ii) ஆம் உப பிரிவில் (அ), (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்கள் அனுமதியுடைய கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்ப வருக்கு பொறுப்படைத்தல் வேண்டும். அவ்வாறு பொறுப்படைக்காத மேற்குறிப்பிட்ட (அ), (ஆ) உருவின் கீழ் விபரிக்கப்பட்ட கழிவுப் பொருட்கள் நிக்கவெரட்டிய பிரதேச சபையினால் கொண்டு நடாத்துகின்ற குப்பை களை ஒன்று சேர்க்கின்றவருக்கு பொறுப்படைத்தல் அல்லது உரிய இடத்திற்கு இடல் வேண்டும்.

(v) இந்த இடைநிலைச் சட்டத்தில் 14 (iv) ஆம் உப பந்தியின் கீழ் பொறுப்பேற்காத மேற்கூறப்பட்ட (அ), (ஆ) உருவின் கீழ் விபரிக்கப்பட்ட கழிவுப்பொருட்கள் நிகவெரட்டிய பிரதேச சபையினால் அவ்வாறு ஒன்று சேர்க்கப்படு வதற்காக விசேடமாக அமைக்கப்பட்ட பாத்திரத்திற்கு அல்லது இடத்தில் இடுவது சட்டரீதியானதாகும்.

**நடமாடும்/ நடைப்பாதை வியாபாரம்**

15. (i) கழிவுப்பொருட்கள் ஒன்றுசேர்கின்ற வியாபாரத்தினை நடாத்திச் செல்கின்ற எல்லா நடமாடும் அல்லது நடைபாதை வியாபாரி அதற்குரிய ஏதாவதொரு நியதிச்சட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள வாறும் தரத்திற்கமையவும் அந்த கழிப்பொருட்களை இடுவதற்காக பாத்திரம் அல்லது கொள்கலனினை வைத்திருத்தல் வேண்டும். அவ்வாறான எவ்வித கழிவுப் பொருளும் நடைபாதையில், பெருந்தெருவில் அல்லது நீர் வடிகால்களில் அல்லது பொது இடங்களில் இடப் படலாகாது :-

(ii) எல்லா நடமாடும்/ நடைபாதை வியாபாரியும் வாகனங் களில் அல்லது பாதசாரிகளின் போக்குவரத்திற்கு தடை ஏற்படும் வகையில் பாத்திரம் அல்லது வேறு கொள்கலன் களை வைத்தலாகாது.

(iii) எல்லா நடமாடும் / நடைபாதை வியாபாரியும் அவரின் வியாபாரம் காரணமாக ஒன்று சேர்கின்ற கழிவுப் பொருட்களை கீழ் காணப்படுமாறு வேறுபடுத்தல் வேண்டும்:-

(அ) உயிரினங்களின் கழிவுப்பொருட்களும் உறுப்புக் குரிய உயிர் பொருட் கூறான கழிவுப்பொருட்களும்;

(ஆ) மீண்டும் உபயோகிக்கக்கூடிய கழிவுப்பொருட் களும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட் களும்;

(இ) அபாயகரமான கழிவுகள்.

(iv) தேர்ந்தெடுக்கப்பட்டு ஒதுக்கப்பட்ட கழிவுப்பொருட்களை வேறாக பாத்திரம் அல்லது கொள்கலனினுள் இடல் வேண்டும். இந்த நியதிச் சட்டத்தில் 15 (iii) உப பிரிவில் (அ) உருப்படி விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளதும் கழிவுப்பொருள் பூச்சிகள், எலிகள் அல்லது வேறு மிருகங்களினால் சாப்பிடுவதற்கு முடியாதவாறு பாது காப்பான கொள்கலன்களில் இட்டு உட்பக்கத்திலேயே வைத்திருத்தல் வேண்டியதுடன், மேலதிக கழிவுப்பொருட் களை இடுவதற்கு தேவையாகும்போது தவிர அதனை மூடிவைத்தல் வேண்டும்.

(v) எல்லா நடமாடும்/நடைபாதை வியாபாரியும் இந்த நியதிச் சட்டத்தின் மூன்றாவது உப பிரிவின் (அ) மற்றும் (ஆ) உருக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருள் வகைகளை அதிகாரமுள்ள கழிவுப்பொருள் ஒன்று சேர்ப்பவருக்கு பொறுப்படைத்தல் வேண்டும்.

(vi) மேற்குறிப்பிடப்பட்ட 15(iii) (இ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அபாயகரமான கழிவுப் பொருட்கள் மேலே (அ), (ஆ) ஆகிய உருப்படிகளின் கீழ் உள்ள கழிவுப் பொருட்களுடன் கலப்படம் எவ்விதத்திலும் செய்யலாகாது. நடைபாதை வியாபாரி அல்லது நடமாடும் வியாபாரம் செய்யும் வியாபாரி அந்த கழிவுகளை வெளியேற்ற வேண்டியது அதற்காக விசேடமான சேவையினை கொண்டு நடாத்து வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள குப்பைகளை ஒன்று சேர்ப்பவருக்காக வேண்டும்.

(vii) இந்த இடைநிலைச் சட்டத்தின் (எ) ஆம் உப பிரிவின்கீழ் பொறுப்பேற்கப்படாத மேற்குறிப்பிடப்பட்ட (அ), (ஆ) உருக்களின் கீழ் விபரிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை நிகவெரட்டிய பிரதேச சபையினால் குப்பைகளை ஒன்று சேர்ப்பதற்காக விசேடமாக அமைக்கப்பட்டுள்ள கொள்கலனுக்கு அல்லது இடத்திற்கு இடல் சட்ட ரீதியானதாகும். எல்லா நடமாடும்/ நடைபாதை வியாபாரியும் கழிவுப்பொருள் பாத்திரங்களை நகர கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவருக்கு பொறுப் படைத்ததற்கு முன் பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறு கட்டணம் செலுத்த வேண்டும்.

**கைத்தொழில் நிலையம்**

16. (i) எல்லா கைத்தொழில் நிலையங்களின் உரிமையாளர்களும் அல்லது உற்பத்தியாளர்களும் கைத்தொழில் நிலைய சூழலில் சேரும் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்து கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வகைப்படுத்தல் வேண்டும் :-

(அ) அகற்றப்பட்ட உணவுக் கழிவுப்பொருட்களும் உயிரினங்களின் கழிவுப்பொருட்களும்;

(ஆ) மீண்டும் உபயோகிக்கக்கூடிய கழிவுப்பொருட் களும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட் களும்;

(இ) அபாயகரமான கழிவுகள்;

(ஈ) சூழலினை கூட்டிப் பெருக்குவதனால் ஒன்று சேர்க்கப்படுகின்ற தூசு மற்றும் வேறு உலர் கழிவுப்பொருட்கள்.

(ii) இந்த இடைநிலைச் சட்டத்தின் 16 (i) ஆம் பிரிவில் (அ) மற்றும் (ஆ) இன் கீழ் காட்டப்பட்டுள்ள கழிவுப்பொருட்கள் நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறு கட்டணம் செலுத்துவதன் மூலம் நிகவெரட்டிய பிரதேச சபையினால் குப்பைகளை ஒன்றுசேர்ப்பவருக்கு பொறுப்படைத்தல் வேண்டும்.

(iii) வடமேல் மாகாணத்தில் 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சூழல் கட்டளைச்சட்டத்தின்கீழ் அந்த வியாபாரத்திற்காக வழங்கப்படுகின்ற சூழல் பாதுகாப்பு உரிமப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய அபாயகரமான கழிவுப் பொருட்கள் வெளியேற்றப்படல் வேண்டும்.

(iv) இந்த இடைநிலைச் சட்டத்தின் 16 (i) (இ) ஆம் உருக்களில் குறிப்பிடப்பட்டுள்ள அபாயகரமான கழிவுகளுடன் கலப்படம் எந்தவிதத்திலாவது செய்யலாகாததுடன் கைத்தொழில் நிலைய உரிமையாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒருவர் உரிய கழிவுப்பொருட்களை வெளியேற்றவேண்டிய அதற்காக விசேடமான சேவையினை கொண்டு நடாத்துவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள குப்பைகளை ஒன்று சேர்ப்பவருக்கேயாகும்.

**அகழ்தல், கட்டமைத்தல் மற்றும் உடைத்தல்**

17. (i) ஏதாவதொரு வீதி, பாதை அல்லது பொது இடத்தினை அகழ்தல் அல்லது ஏதாவதொரு கட்டமைத்தல் அல்லது உடைப்பவர்களும் அதனால் வெளியேற்றப்படுகின்ற கழிவுப் பொருட்களை உரிய முறையில் அந்த சூழலில் இருந்து அகற்றும் வரையில் சூழலினுள் அல்லது செயலாளரினால் அனுமதிக்கப்படுகின்ற இடத்தில் களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

(ii) இந்த இடைநிலைச் சட்டத்தில் 17(i) ஆம் உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கழிவுப்பொருட்களை நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக் கப்படுகின்றவாறு கட்டணத்தினைச் செயலாளருக்குச் செலுத்துவதற்கு நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவில் கழிவுப்பொருள் ஒன்று சேர்ப்பவருக்கு பொறுப்படைத்தல் வேண்டும்.

**வைத்தியசாலை**

18. (i) எல்லா வைத்தியசாலைகளிலும் பொறுப்பாளர்களினால் சூழலில் ஏற்படுகின்ற கழிவுப்பொருட்களை கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு தேர்ந்தெடுத்து வகைப்படுத்த வேண்டும்:-

(அ) அகற்றப்பட்ட உணவுக் கழிவுப்பொருட்கள் உயிரினங்களின் கழிவுப்பொருட்கள் ;

(ஆ) மீள் உபயோகப்படுத்தக்கூடிய கழிவுப்பொருட் களும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்களும் ;

(இ) பிணி ஆய்வு நிலைய கழிவுப்பொருட்கள்;

(ஈ) அபாயகரமான கழிவுகள்;

(உ) சூழலினை கூட்டிப் பெருக்குவதனால் ஒன்று சேர்கின்ற தூசு மற்றும் வேறு உலர் கழிவுப் பொருட்கள்.

(ii) 18 (i) ஆம் உப பிரிவின்கீழ் (அ) மற்றும் (ஆ) உருக்களில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்கள் வகைகளை வெவ்வேறான கொள்கலன்களில் இட்டு வெளியேற்றப்படும் வரையில் உரிய இடத்தில் களஞ்சியப் படுத்தல் வேண்டும். அந்த கழிவுப் பொருட்களை நிகவெரட்டிய பிரதேச சபையினால் அதற்காக விசேடமாக அமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குப்பைகளை ஒன்று சேர்க்கும் சந்தர்ப்பத்தில் நிகவெரட்டிய பிரதேச சபைக்காக குப்பைகளை ஒன்று சேர்ப்பவரிடம் பொறுப்படைத்தல் வேண்டும். 18 (i) (உ) உருவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப் படுகின்ற கட்டணத்தினை செலுத்திய பின் அதற்காக விசேட குப்பைகளை ஒன்று சேர்க்கப்படும் முறையிலேயே நிகவெரட்டிய பிரதேச சபைக்காக குப்பைகளை ஒன்று சேர்ப்பவரிடத்தில் பொறுப்படைத்தல் வேண்டும்.

(iii) 18 (i) ஆம் உப பிரிவில் (இ), (ஈ) உருக்களின் கீழ் ஒன்று சேர்கின்ற கழிவுப்பொருட்களை எந்த வகையிலாவது அல்லது வேறு கழிவுப்பொருட்களுடன் கலப்படம் செய்யலாகாததுடன் உரிய கழிவுப்பொருட்களை வடமேல் மாகாணத்தின் 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் திற்கான வடமேல் மாகாண சூழல் கட்டளையின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு உரிமப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய வெளி யேற்றல் வேண்டும்.

**தனியார் மருத்துவமனை மற்றும் இரசாயனக்கூடம்**

19. (i) தனியார் மருத்துவ மனையின் அல்லது இரசாயனக் கூடத்தினை உரிமையாளர்கள் தமது நிறுவனத்தினுள் சேர்க்கின்ற கழிவுப்பொருட்களை கீழ்க் குறிப்பிடப்பட்ட வாறு தேர்ந்தெடுத்து வகைப்படுத்த வேண்டும்:-

(அ) அகற்றப்பட்ட உணவுக் கழிவுப்பொருட்கள் உயிரினங்களின் கழிவுப்பொருட்கள் ;

(ஆ) மீள் உபயோகப்படுத்தக்கூடிய கழிவுப்பொருட் களும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்களும் ;

(இ) பிணி ஆய்வு நிலைய கழிவுப்பொருட்கள்;

(ஈ) அபாயகரமான கழிவுகள்;

(உ) சூழலினை கூட்டிப் பெருக்குவதனால் ஒன்று சேர்கின்ற தூசு மற்றும் வேறு உலர் கழிவுப் பொருட்கள்.

(ii) 19 (i) ஆம் உப பிரிவின்கீழ் (அ) மற்றும் (ஆ) உருக்களில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்கள் வகைகளை வெவ்வேறான கொள்கலன்களில் இட்டு வெளியேற்றப்படும் வரையில் உரிய இடத்தில் களஞ்சியப்படுத்தல் வேண்டியதுடன், அந்த கழிவுப் பொருட்களை பிரதேச சபையினால் அதற்காக விசேடமாக அமைக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின் கீழ் குப்பைகளை ஒன்று சேர்க்கப்படும் சந்தர்ப்பத்தில் நிகவெரட்டிய பிரதேச சபைக்காக அவ்வாறு குப்பைகளை ஒன்று சேர்ப்பவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(iii) 19 (i) (உ) உருவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற கட்டணத்தினை செலுத்திய பின் குப்பைகளை ஒன்று சேர்ப்பவரிடத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

(iv) முதலாவது பந்தியில் (இ), (ஈ) உருக்களின் கீழ் ஒன்று சேர்கின்ற கழிவுப்பொருட்களை வேறு கழிவுப் பொருட்களுடன் கலப்படம் செய்யலாகாததுடன் உரிய கழிவுப் பொருட்களை வடமேல் மாகாணத்தின் 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான வடமேல் மாகாண சூழல் கட்டளையின் கீழ் வழங்கப்பட்ட சூழல் பாதுகாப்பு உரிமப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை களுக்கமைய வெளியேற்றல் வேண்டும்.

### வேறு செயல்கள்

20. (i) ஆம் இலக்க (8) தொடக்கம் (19) வரையிலான பந்திகளில் விசேடமாக குறிப்பிடப்படாத ஏதாவதொரு வியாபாரத்தினை நடாத்திச் செல்கின்ற ஒருவர் அல்லது பொதுமக்களின் கலந்துகொள்ளலுடன் சமய உறுப்பி னர், கலாசார அல்லது கல்வி அலுவலுக்காக கேளிக்கைகளை ஏற்பாடு செய்கின்றவர் வியாபாரம் அல்லது அலுவல்கள் காரணமாக சூழலினுள் ஏற்படுகின்ற கழிவுப்பொருட்கள் கீழ்க் குறிப்பிடப் பட்டுள்ளவாறு வகைப்படுத்தப்படல் வேண்டும்.

(அ) அகற்றப்பட்ட உணவுக் கழிவுப்பொருட்கள், உயிரினங்களின் கழிவுப்பொருட்கள் ;

(ஆ) மீள் உபயோகப்படுத்தக்கூடிய கழிவுப்பொருட் களும் மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்களும் ;

(இ) அபாயகரமான கழிவுகள் ;

(ஈ) சூழலினை கூட்டிப் பெருக்குவதனால் ஒன்று சேர்கின்ற தூசு மற்றும் வேறு உலர் கழிவுப் பொருட்கள்.

(ii) 20 (i) ஆம் உப பிரிவில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தொழிற்பாட்டினை செயற்படுத்துபவர் அந்த செயற்பாட்டினால் ஏற்படுகின்ற கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பதற்கு விசேட வேலைத்திட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்வதற்கு இயலுமான வகையில் நேர காலத்துடனே நிகவெரட்டிய பிரதேச சபைக்கு அறிவித்தல் வேண்டும் ;

(iii) தேர்ந்தெடுத்து வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்களை வெளியேற்றும் வரையில் வெவ்வேறான கொள்கலன் களில் இடவேண்டியதுடன், அவற்றை உரிய இடத்தில் களஞ்சியப்படுத்தல் வேண்டும் ;

(iv) இந்த இடைநிலைச் சட்டத்தில் 20 (i) ஆம் பந்தியில் (அ) மற்றும் (ஆ) உருக்களின் கீழ் ஒன்றுசேர்கின்ற கழிவுப் பொருட்களை நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டவாறு அறிவித்தலுக்குட்படுத்தப்பட்ட கட்டணத்தினை அறவிட்டு, நிகவெரட்டிய பிரதேச சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட குப்பைகளை ஒன்று சேர்ப்பவரினால் பொறுப் பேற்கப்படல் சட்டரீதியானதாகும்.

(v) என்றாலும், ஏதாவதொரு சமய வழிபாட்டு நிலையத்தில் சமய வழிபாட்டிற்காக, வர்த்தக நோக்கத்திற்காக அன்றி கொண்டு நடாத்தப்படுகின்ற எந்த செயற்பாட்டிற்காகவும் அந்த செயற்பாட்டினால் ஒன்று சேர்கின்ற மேற்கூறப்பட்ட (i) ஆம் உப பிரிவில் (அ), (ஆ), மற்றும் (ஈ) ஆகிய சிறுபிரிவுகளின் கீழ் ஒன்று சேர்க்கப்படும் கழிவுப் பொருட்களை வெளியேற்றல் சம்பந்தமாக மேற்குறிப் பிடப்பட்டுள்ள (iv) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்குக் காலம் அறவிடப்படும் கட்டணம் என்பது உரித்தாகாது.

(vi) மேலே (i) (இ) உருவில் குறிப்பிடப்பட்டுள்ள அபாயகரமான கழிவுகள் (அ), (ஆ) மற்றும் (ஈ) உருக்களின் கீழ் கலப்படம் ஏற்படுவது எவ்விதத்திலும் செய்யலாகாத துடன், அந்த குப்பைகளை வெளியேற்ற வேண்டியது அதற்காக விசேடமான சேவையினை கொண்டு நடாத்துவதற்கான அதிகாரமுள்ள குப்பைகளை ஒன்று சேர்ப்பவருக்கேயாகும்.

### வீதியும் பொது இடங்களும்

21. (i) நிகவெரட்டிய பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படு கின்றவாறு தவிசாளரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களை திட்டமிடல், கட்டுப்படுத்தலும் நிர்வகிப்ப தற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்:-

(அ) நிகவெரட்டிய பிரதேச சபையின் அதிகாரப் பிரதே சத்தில் அமைந்துள்ள குப்பைகளை ஒன்று சேர்ப்பவருக்கு மிகவும் பொருத்தமானது என்று அறிந்துக் கொள்ளும் இடத்தில் அல்லது இடங்களில் போதியளவிலான கொள்கலன்களை கொண்டு நடாத்தல்;

(ஆ) விழாக்களின்போது, விசேட சந்தர்ப்பங்களில் அல்லது நிகவெரட்டிய பிரதேச சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற சம்பவங்களின்போது நிகவெரட்டிய பிரதேச சபையினால் தீர்மானிக்கப் படுகின்ற போது அல்லது உரிய விழா அல்லது விசேட சம்பவத்தினை ஒழுங்குபடுத்துபவரின் கோரிக்கைப்படி அல்லது பொது இடங்களின் உபயோகத்திற்காக நகர்த்தக்கூடிய கழிவுப் பொருள் கொள்கலன்களை வழங்குதல்.

(இ) குப்பைகளை தற்காலிகமாக ஒன்று சேர்ப்பதற்கு உகந்தது என்று தீர்மானிக்கப்படுகின்ற இடங் களில் பொருத்தப்பட்டுள்ள பொது கழிவுப் பொருள் தொட்டிகள் அல்லது கொள்கலன்கள் சுத்தமாக கொண்டு நடாத்தலும் கொள்கலன் களில் ஒன்று சேர்க்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை அதற்கு அண்மையில் வசிக்கின்ற பொது மக்களுக்கு ஊறு விளைவிக்க முன் அவற்றை அகற்றுதல்;

(ஈ) மேற்போந்த பந்திகளில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் பற்றி கிடைக்கின்ற முறையீடுகளை பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுத்தல்.

**நிக்கவெரட்டிய பிரதேச சபையின் பொறுப்பு**

22. (i) செயலாளர் தவிசாளருடன் கலந்தாலோசித்து நிகவெரட்டிய பிரதேச சபையின் அனுமதியுடன் கீழ்க் காணப்படும் செயற்பாடுகளை திட்டமிடல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் நிர்வகிக்க முடியும்:-

(அ) கழிவுப்பொருட்களை குறைப்பதற்கு, மீள் உபயோகப் படுத்துவதற்காக பொதுமக்களை ஊக்குவித்தல்;

(ஆ) கழிவுப்பொருட்களை தேர்ந்தெடுத்து வகைப்படுத்தல், ஒன்று சேர்த்தல், களஞ்சியப்படுத்தல், விடுவித்தல் மற்றும் வெளியேற்றல் பற்றி அறிவுறுத்தும் செயலமர்வு நடாத்தல் அல்லது ஊடகத்தினூடாக பிரசாரம் செய்தல்;

(இ) மீள் உபயோகிப்பு மற்றும் மீள்சுழற்சிப் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கும் மற்றும் சிறு வர்த்தகர்களுக்கும் வசதிகளை பெற்றுக்கொடுத்தல்;

(ஈ) கழிவுப்பொருட்களை குறைத்தல், மீள் உபயோகிப்பு மற்றும் மீள்சுழற்சி நடவடிக்கைகளுக்கு தொடர்புபட்டுள்ளவர்களை ஊக்குவித்தல்.

(உ) கழிவுப்பொருட்களை விடுவித்தல் பற்றிய படிவம் ஒன்றினை கொண்டு நடாத்தல்;

(ஊ) நிகவெரட்டிய பிரதேச சபை அதிகார பிரிவில் ஒவ்வொரு பிரதேசத்தில் இருந்தும் ஒன்று சேர்க்கின்ற ஒவ்வொரு கழிவுப் பொருள் வகைகளையும் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறு கழிவுப்பொருட்களை ஒன்று சேர்க்கின்ற திகதிகள், நேரங்கள், முறைமை மற்றும் கட்டணம் என்பவற்றை குறிப்பிட்டு கழிவுப்பொருட்களை ஒன்று சேர்க்கும் நேரசூசியினை அமைத்தல் மற்றும் பிரசித்த விடுமுறை நாட்களில் கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பதற்கான நிபந்தனையினையும் அந்த நேரசூசியில் குறிப்பிடப்படல் வேண்டும்.

(எ) அதிகாரம் வழங்கப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பவருக்கு பொறுப்படைக்கப்படாத ஏதாவதொரு வகைப்படுத்தப்பட்ட கழிவுப்பொருட்களை நேரசூசிக்கமைய உரிய நேரத்தில் ஒன்று சேர்த்தல்.

(ஏ) அதிகாரம் வழங்கப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பவருக்கு பொறுப்படைக்கப்படாத ஆபத்துடைய கழிவுப்பொருட்கள் மற்றும் ஏதாவதொரு கழிவுப் பொருட்களை சுத்தமாக கொண்டு செல்லல்.

(ஐ) ஆபத்துடைய கழிவுப்பொருட்கள் அல்லது செயலாளரினால் குறிப்பிடப்பட்ட வேறு ஏதாவதொரு கழிவுப்பொருள் வகைகளை தவிர வீதிகளை கூட்டிப் பெருக்குவதனால், கால்வாய்களை சுத்தம் செய்வதனால் மற்றும் பொது இடங்களை சுத்தம் செய்வதனால் ஒன்று சேர்க்கப்படுகின்ற கழிவுப் பொருட்கள் மற்றும் நிகவெரட்டிய பிரதேச சபையின் தொழிலாளர்களினால் ஒன்று சேர்க்கப்படுகின்ற கழிவுப்பொருட்கள் அதிகாரமுள்ள கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பவருக்கு பொறுப்படைத்தல் அல்லது நிகவெரட்டிய பிரதேச சபையினால் ஒழுங்குமுறையாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஒ) உணவு மற்றும் வேறு உயிரினங்களின் கழிவுப்பொருட்கள் மீள் உபயோகப்படுத்தக்கூடிய கழிவுப்பொருட்களையும் முழுதாக அல்லது பகுதிகளாக அமைப்பதற்கும் புனரமைப்பதற்கும் செயற்பாட்டுடன் நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவில் கழிவுப்பொருள் ஒன்று சேர்ப்பவரினால் ஒன்று சேர்க்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை புறம்பாக்கப்பட்ட கழிவுப் பொருள் சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் அந்த செயற்பாடுகளில் இருந்து தவிர்க்கின்றதும் இந்த கழிவுப்பொருட்களில் வேறு எஞ்சிய கழிவுப்பொருட்களை செயலாளரினால் அனுமதிக்கப்படுகின்ற வண்ணம் வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(ஓ) வடமேல் மாகாணத்தின் சூழல் அதிகார சபையுடன் எல்லா ஆபத்துடைய கழிவுப்பொருட்களையும் வெளியேற்றல் சம்பந்தமாக எல்லா நடவடிக்கைகளையும் வழிநடாத்தல்.

(ஔ) 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண கட்டளைச் சட்டத்தின்படி அதிகாரப்பத்திரம் அல்லது சூழல் பாதுகாப்பு அதிகாரப்பத்திரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் அந்த அதிகாரப்பத்திரத்தில் அல்லது சூழல் பாதுகாப்பு அதிகாரப் பத்திரத்தில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய கழிவுப் பொருட்களை தீயிடல் அல்லது சுத்தமாக குழிகளை நிரப்புதலை கொண்டு நடாத்தல் அல்லது அதுபற்றி வேறு செயற்பாட்டினை மேற்கொள்ளல்.

(ஃ) கழிவுப் பொருட்களை கூட்டுதல், ஒன்று சேர்த்தல், தேர்ந்தெடுத்து வேறுபடுத்தல், கொண்டு செல்லுதல், மாற்றம் செய்தல் மற்றும் வெளியேற்றல் ஆகிய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள எல்லா சேவையாளர்களுக்கும் சுத்தம் செய்யும் காரணி, உரிய ஆடை, கையுறை, முகமூடி மற்றும் காலுறை வழங்கல் மற்றும் அந்த சேவையாளர்களுக்காக சுகாதார காப்புறுதி செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒரு வருடத்திற்கு இரு தடவைகள் சுகாதார மருத்துவ சோதனை நடாத்தல்.

(க) நிகவெரட்டிய பிரதேச சபை சூழலுக்காக உள்ளக கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டத்தினை நடைமுறைப் படுத்தல்.

(கா) 2000 ஆம் ஆண்டின் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றி தேசிய மாற்றுவழி மற்றும் உரிய சட்டத்திற்கும் 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் கட்டளைச் சட்டத்திற்கு அமைய பரவலாக கீழ் நிலையில் ஒவ்வொரு காலாண்டினை அணவல் செய்கின்றதும் கடைசி வெளியேற்றம் சம்பந்தமாக 3 வருட காலத்தினை முன்னோக்கிய அணவல் செய்கின்ற திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நடைமுறைத் திட்டத்தினை ஒழுங்கமைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் அந்த திட்டத்தினை அணவல்படுத்துகின்ற கால எல்லைக்கமைய எப்போதும் என்ற அடிப்படையில் நிகவெரட்டிய பிரதேச சபையினால் வருடாந்தம் அதனை அனுமதிக்கப்படும்.

(கி) (அ) தொடக்கம் (க) வரையிலான உருக்களில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக கிடைக்கின்ற ஏதாவதொரு முறையீடு, மேலெழும் தொல்லைக்காயின் மூன்று நாட்களிலும் வேறு ஒரு முறையீடுகளுக்கு பதினான்கு நாட்களிலும் விசாரணை செய்தலும் உடனடியாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

**அனுமதிபத்திரம்**

23. (i) கழிவுப்பொருள் மீள உபயோகத்திற்கு எடுப்பதும் மீள்சுழற்சி செய்யக்கூடிய சேதன பசளைகளை தயாரித்தல், ஜீவ வாயு அல்லது வேறு தயாரிப்புக்களை தயாரிக்கின்ற ஒருவர் அல்லது தயாரிக்கின்றவர்கள் கீழ்க் காணப்படும் தகவல்களை பூர்த்தி செய்வாராயின் அவருக்கு நிகவெரட்டிய பிரதேச சபையினால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்:-

(அ) நிகவெரட்டிய பிரதேச சபையினால் அனுமதிக்கப்பட்ட இடைநிலைச் சட்டம் நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவில் அல்லது வேறொரு உள்ளூராட்சித் தாபன பிரதேசத்திலோ வியாபாரம் ஒன்றினை கொண்டு நடாத்தல்;

(ஆ) 1990 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வடமேல் மாகாண சூழல் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற சூழல் பாதுகாப்பு அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்;

(இ) ஒன்று சேர்க்கப்படும் கழிவுப்பொருட்களுக்காக நிகவெரட்டிய பிரதேச சபையினால் அனுமதிக்கப்பட்ட தரங்களுக்கு அமைய கட்டமைக்கப்படுகின்ற கழிவுப் பொருள் ஒன்று சேர்க்கும் மத்திய நிலையம் இருத்தல்;

(ஈ) ஒன்று சேர்க்கப்படும் கழிவுப்பொருட்களை செயலாளரினால் அனுமதிக்கப்படுகின்றவாறும் பொதுமக்களுக்கு தொல்லை ஏற்படாத சுகாதார பாதுகாப்பு முறைப்படி கொண்டு செல்வதற்காக வாகனங்கள் இருத்தல் வேண்டும்;

(உ) உரிய வியாபாரம் நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் கொண்டு நடாத்திச் செல்லும் போது நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப் படுகின்றவாறு உரிய கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பதற்காக கட்டணம் நிகவெரட்டிய பிரதேச சபைக்கு செலுத்துவதன் மூலம் கழிவுப் பொருட்களை ஒழுங்குப்படுத்தும் போது அல்லது புனரமைக்கும் போது எஞ்சுகின்ற அல்லது தள்ளுபடியாகின்ற அல்லது இடைநிலை உற்பத்தியாக மாற்றப்படும் கழிவுப்பொருள் நிகவெரட்டிய பிரதேச சபையினால் அனுமதிக்கப்படுகின்றவாறு பிரதேச சபைக்கு பொறுப்படைப்பதற்கு உடன்படல் வேண்டும்.

(ii) நிகவெரட்டிய பிரதேச சபை அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு நிராகரிக்கும்போது அல்லது செல்லுபடியற்றதாக்கியபோது விண்ணப்பதாரி அவ்வாறு நிராகரிப்பதற்கு மற்றும் செல்லுபடியற்றதாக்குவதற்கான காரணத்தினை கோரும்போது அதற்கான காரணங்களினை விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொண்டு 30 நாட்களுக்குள் விண்ணப்பதாரிக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

(iii) செயலாளரினால், செல்லுபடியான காலத்தினுள் ஒன்று சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப்படுகின்ற கழிவுப் பொருட்களின் வகை அல்லது வகைகள் அந்த கழிவுப்பொருட்களை ஒன்று சேர்ப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட பிரதேசம் மற்றும் வேறு தகுந்த நிபந்தனைகள் அத்தாட்சிப்பத்திரத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

(iv) இந்த இடைநிலைச் சட்டத்தின் 23 (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு அமைய செயல்படாத சந்தர்ப்பத்தில் இந்த இடைநிலைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் இரத்துச் செய்ய வேண்டும்.

(v) 23 (iv) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்களின்கீழ் அத்தாட்சிப்பத்திரம் ஒன்றினை இரத்துச் செய்யப்பட்ட போது எவர் ஒருவரினால் கழிவுப்பொருட்களை ஒன்று சேர்த்தல் அல்லது பெற்றுக்கொள்ளலாகாது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் அனுமதி பத்திரத்தினை இரத்துச் செய்தது பற்றி பொது மக்களினை அறிவுறுத்துவதற்காக செயலாளரினால் ஊடகத்தின் மூலம் அல்லது வேறு வகையில் விளம்பரப் படுத்தல் வேண்டும்.

**கழிவுப்பொருட்கள் வெளியேற்றப்படும் பிரதேசங்கள்**

24. நிகவெரட்டிய பிரதேச சபையினால் கழிவுப்பொருட்களை வெளியேற்றும் செயற்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுமதிக்கப்படாத ஒருவர் உட்பிரவேசிக்கலாகாததுடன், அங்கு நடமாடவும் கூடாது. அந்த பிரதேசத்தில் ஏதாவதொரு பொருள், உபகரணங்கள் அல்லது அப்புறப்படுத்தப்படுபவற்றை சேமித்தல், குழப்பிவிடுதல், அல்லது அப்புறப்படுத்தலாகாது. எவர் ஒருவரை விசேடமாக குறிப்பிடப்படுகின்ற ஒழுங்குமுறைகளுக்கு அமைய நிகவெரட்டிய பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்பட்டால் மாத்திரமன்றி நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படுகின்ற ஏதாவதொரு தடை விதிக்கப்பட்ட கழிவுப் பொருட்களை சேமிக்கலாகாது.

25. அனுமதிக்கப்பட்ட ஏதாவதொரு ஒழுங்குமுறைக்கு உட்பட்டு செயலாளரினதும் வடமேல் மாகாண சூழல் அதிகாரசபையின் பூரண அனுமதியுடன் அன்றி எவர் ஒருவர் நிகவெரட்டிய பிரதேச சபை எல்லையினுள் அமைந்துள்ள காணிகளில் அல்லது வசதியான வெளி இடங்களில் ஏற்படுகின்ற கழிவுப் பொருட்களை சேமித்தலுக்காக இடமளித்தல் அல்லது உபயோகித்தல் கூடாது.

26. கழிவுப் பொருட்களை வெளியேற்றப்படும் எந்த ஒரு இடத்திலேனும் அந்த இடத்திற்கு அல்லது காணிக்கு எல்லையாகின்ற இடத்தில் மதில் அல்லது அதற்காக உகந்த மேலுறையினால் மூடப்பட்டு எல்லையிடப்பட்டு இருக்க வேண்டியதுடன் உரிய இடத்திற்கு அல்லது காணிக்கு வெளியேற்றப்படும் குப்பை கூலங்கள் காற்று, நீர் ஆகியவற்றினால் அண்மையில் உள்ள காணிகளுக்கு அல்லது பிரதேசங்களுக்கு போகாது இருக்கும் வண்ணம் கொண்டு நடாத்தல் வேண்டும்.

**வேறு**

*27*. (i) தவிசாளர் அல்லது அவரினால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவருக்கு எல்லா சாதாரண நேரங்களில் ஏதாவதொரு சூழலுக்கு உட்புகுத்துவதற்கு மற்றும் அதன் உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர் இந்த இடைநிலைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய செயற்படுகின்றாரா என்று பரிசீலிப்பதற்கு அதிகாரம் உண்டு.

(ii) அந்த சூழலின் உரிமையாளர், குடியிருப்பாளர், முகாமையாளர் அல்லது அங்கு வாழ்கின்ற அல்லது சேவை செய்கின்ற ஒருவர் தவிசாளர் அல்லது அவரின் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தருக்கு தேவைப்படுகின்ற தகவல்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) இந்த இடைநிலைச் சட்டத்தின் கீழ் தவிசாளரின் அதிகாரம் உள்ள உத்தியோகத்தருக்கு தமது அதிகாரத்தினை உபயோகிப்பதற்கு எவர் ஒருவரும் தடை செய்யலாகாது.

***தண்டனை***

*28*. இந்த இடைநிலைச் சட்டத்தின் கீழ் எந்த ஒரு பந்தியினையும் மீறுதல் குற்றமாகும். அந்த குற்றம் சம்பந்தமாக அதிகாரமுள்ள நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்ட பின்பு, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 122 ஆம் இலக்க பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனை எல்லைகளின் கீழ் தண்டனை பெறுதல் வேண்டும்.

**பொருள் விளக்கம்** :-

*29*. இந்த இடைநிலைச் சட்டத்தில் செயற்பாடுகளுக்காக சொல் சம்பந்தமாக பொருள் தேவைப்படின் ;

''கழிவுப்பொருட்கள் அல்லது திண்மக் கழிவுப்பொருட்கள்'' என்பது, அதனை கைவிடப்படும் நபருக்கு எவ்வித நுகர்வு பெறுமதியற்ற பொருள் என்று கருதுவதுடன், குப்பை துகள்கள், வீதியினை சுத்தம் செய்யும்போது ஒன்றுசேரும் பொருள்கள், தூசு, மண், சேறு மற்றும் சாம்பல் என்று கருதப்படும்.

''உணவு கழிவுப்பொருட்கள்'' என்பது, மனித நுகர்விற்கு உபயோகப்படுத்த முடியாத உணவுப் பொருட்கள் என்று கருதப்படும்.

''அபாயகரமான கழிவுப் பொருள்'' என்பது, மக்கள் சுகாதாரத்திற்கு அல்லது சூழலுக்கு தீங்கு விளைவிக்கும் நச்சுத் தன்மையுடைய, தீ அபாயமுள்ள, மீள் சுழற்சி செய்கின்ற, கதிர் வீச்சுடைய அல்லது தொற்றும் தன்மையுடைய கழிவுப் பொருள் என்று கருதப்படும்.

''ஒன்று சேர்த்தல்'' என்பது, அதிகாரம் கிடைக்கப்பெற்ற ஒன்று சேர்ப்பவருக்கு அல்லது நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவில் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவரினால் மீள்சுழற்சி செய்தல், ஒழுங்கமைத்தல், பழுதுபார்த்தல் அல்லது வெளியேற்றுவதற்காக கொண்டு செல்வதற்காக கழிவுப் பொருட்களை ஒன்று சேர்த்தல் என்று கருதப்படும்.

''சேதனப்பசளை'' என்பது, காபன் தன்மையுடைய கழிவுப் பொருட்கள் நுண்ணுயிர்கள் சீரனமடைந்த பின் கிடைக்கின்ற கடைசி வெளியேற்றம் என்று கருதப்படும். அது மண் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக செயற்படுகின்ற உக்கிப் பொருளாகும்.

''தவிசாளர்'' என்பது, நிகவெரட்டிய பிரதேச சபைக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தவிசாளர்.

''செயலாளர்'' என்பது, நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவில் நிகவெரட்டிய பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக ஏற்படுத்தப்பட்ட நிகவெரட்டிய பிரதேச சபையின் செயலாளர் என்று கருதப்படுவதுடன், அந்த நிகவெரட்டிய பிரதேச சபையின் செயலாளருக்காக வேலை பார்ப்பதற்கு நியமிக்கப்பட்ட எவர் ஒருவர் மற்றும் நிகவெரட்டிய பிரதேச சபை சட்டத்தின் கீழ் செயலாளரின் அதிகாரம், பொறுப்பு அல்லது அலுவல்களை செயற்படுத்துவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்ட அந்த நிகவெரட்டிய பிரதேச சபையின் எந்தவொரு உத்தியோகத்தர் ஒருவர் அந்த உத்தியோகத்தருக்கு அந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அளவு என்பன உள்ளடங்கும்.

''களஞ்சியப்படுத்தல்'' என்பது, உரிமையாளரின் அல்லது குடியிருப்பாளரின் சுற்றாடலினுள் அல்லது அனுமதிக்கப்பட்ட பொது ஒன்று சேர்க்கும் இடத்தில் கழிவுப் பொருட்களை இடல் அல்லது சேமித்து வைத்தல் என்று கருதப்படும்.

''கட்டணம்'' என்பது, நிகவெரட்டிய பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற ஏதாவதொரு கட்டணம் என்று கருதப்படும்.

''வீட்டுத் தோட்ட கழிவுப் பொருட்கள்'' என்பது, வீட்டுத் தோட்டத்தில் காணப்படுகின்ற மரங்களினால் அல்லது கன்றுகளினால் அகற்றப்படுகின்ற கல், மண் ஆகியன என்று கருதப்படும்.

''மீள் சுழற்சி செய்யக்கூடிய கழிவுப் பொருட்கள்'' என்பது, கழிவுப் பொருட்களை மேலும் கழிவுப் பொருளாக அறிந்து கொள்ள முடியாத வகையில் புதிய நுகர்வு பொருட்களை தயாரிப்பதற்காக உபயோகப்படுத்தக்கூடிய கழிவுப் பொருட்கள் என்று கருதப்படும்.

''மீள்சுழற்சி செய்யக்கூடிய கழிவுப்பொருட்கள்'' என்பது, மேலும் கழுவுவதனால், கிருமிகளை அழிப்பதனால் அல்லது வேறு வகையில் சுத்தம் செய்த பின்பு உபயோகிக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் என்று கருதப்படும்.

''போக்குவரத்து'' என்பது, மனித சக்தியினால் அல்லது இயந்திரத்தினால் இயங்குகின்ற ஏதாவதொரு வாகனத்தினை உபயோகித்து கழிவுப் பொருட்களை ஒன்று சேர்க்கின்ற இடத்தில் இருந்து அவற்றை அமைத்தல், ஒன்று சேர்த்தல், வெளியேற்றலுக்காக காணப்படும் இடத்திற்கு கொண்டு செல்லுதல் என்று கருதப்படும்.

''பாத்திரம்/கொள்கலன் அல்லது பொதி'' என்பது, துணைவிதியில் காட்டப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய கழிவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தல், விடுத்தல், ஒன்று சேர்த்தல் அல்லது கொண்டு செல்வதற்காக உபயோகப்படுத்தப்படும் ஏதாவதொரு பொதியினை தொட்டி, பாத்திரம் அல்லது பை போன்ற வேறு கொள்கலன்கள் என்று கருதப்படும்.

''அதிகாரமுள்ள ஒன்று சேர்ப்பவர்'' என்பது, கழிவுப் பொருட்கள் ஒன்று சேர்ப்பதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கு செயலாளரினால் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்பவர் என்று கருதப்படும்.

''அதிகாரமுள்ள உத்தியோகத்தர்'' என்பது, இந்த இடைநிலைச் சட்டத்தின் கீழ் உள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு அல்லது கொண்டு நடாத்துவதற்கு சந்தர்ப்பத்திற்கு ஏற்ப தவிசாளர் அல்லது அவரினால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவர் என்று கருதப்படும்.

''வெளியேற்றல்'' என்பது, மீள் உபயோகிக்கப்படாததும் மீள் சுழற்சி செய்யப்படாததும், ஒழுங்கமைக்கப்படாததும், முறைப்படுத்தப் படாததுமான எல்லா கழிவுப் பொருட்களை நிரந்தரமாக இடுவதற்கு கருதப்படுகின்ற காணியின் மேற்புறத்தில் அல்லது உட்பக்கத்தில் இடுவது என்று கருதப்படும்.

''மாற்றப்படும் இடம்'' என்பது, நிகவெரட்டிய பிரதேச சபையினால் இந்த அலுவலுக்காக குறிக்கப்படும் இடம் என்று கருதப்படுவதுடன் அந்த இடத்தில் இருந்து ஏதாவதொரு மீள்சுழற்சி செய்தல், வெளியேற்றுவதற்கான வசதியுடையவாறு கழிவுப் பொருட்களை கொண்டு செல்வதனை மேம்படுத்தும் செயல்பாட்டிற்காக கழிவுப் பொருட்களை மிகவும் சிறிய அளவிலான வாகனங்களில் இருந்து மிகவும் பெரிய அளவிலான வாகனங்களுக்கு மாற்றப்படுவது இங்கு நடைபெறும்.

''நபர்'' என்பது, கூட்டமைக்கப்பட்ட அல்லது கூட்டமைக்கப்படாத கூட்டுத்தாபனத்தின் அல்லது நபர்களின் சங்கம் அல்லது குழு அல்லது எந்த ஒரு நபர் என்று கருதப்படும்.

''நிகவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவில் கழிவுப் பொருட்களை ஒன்று சேர்ப்பவர்'' என்பது, தாங்கிகளில் அல்லது கொள்கலன்களில் கழிவுப் பொருட்களை கூட்டி இடல், ஒன்று சேர்த்தல், பெற்றுக்கொள்ளல் அல்லது ஒதுக்குதலுக்காக பிரதேச சபையினால் ஈடுபடுத்தப்பட்ட சேவையாளர் அல்லது ஏதாவதொரு செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு சபையுடன் உடன்படிக்கைப்படி உட்பட்டுள்ளவர் என்று கருதப்படும்.

''வேறுபடுத்தல்'' என்பது, இந்த துணைவிதியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வேறுபாடுகளுக்கு அமைய பலதரப்பட்ட கழிவுப் பொருட்களை வேறுபடுத்தல் என்று கருதப்படும்.

''ஒன்று சேர்த்தல்'' என்பது, கழிவுப் பொருட்களை உபயோகமுள்ள உருப்பொருளாக திருத்தியமைக்கும் செயற்பாடு என்று கருதப்படும்.

''சபை'' என்பது, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பிரதேச சபை என்று கருதப்படும்.

''நிக்கவெரட்டிய பிரதேச சபை அதிகாரப் பிரிவு'' என்பது, பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தலுக்குட்பட்ட பிரதேசம் என்று கருதப்படும்.

''பாதுகாப்புடைய நிலம் நிரப்புதல்'' என்பது சமூக, சுகாதாரம் மற்றும் சூழல் விளைவுகளை கட்டுப்படுத்துதற்கு இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்திற்கு அமைய கழிவுப் பொருட்களை நிலத்திற்கு இறுதியாக வெளியேற்றல் என்று கருதப்படும்.

''உரிமையாளர் அல்லது குடியிருப்பாளர்'' என்பது, சுற்றாடலின் உரிமையாளர் அல்லது உரிமையாளருக்காக அற்றோனி அதிகாரம் உள்ள எவர் ஒருவர் அல்லது உரிமையாளரினால் உரிய தொழிலினை, தொழிற்சாலை, தோட்டத்தினை முகாமைத்துவத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ள பிரதிநிதி அல்லது பொறுப்பாளர் அல்லது வாடகைக்கு பெற்றுக்கொள்பவர்கள் உள்ளடங்குவதுடன், வேறொருவரின் கட்டளைப்படி செயற்படுகின்ற முகாமையாளர்கள் உள்ளடங்குவர்.

''இந்த பிரிவின் அலுவலுக்காக தோண்டல், கட்டமைப்பு மற்றும் உடைத்து விடல் ஆகிய செயற்பாட்டில் உள்ள எல்லோரும்'' என்பது, சேவை பெறுநரினால் அந்த சேவைக்காக ஈடுபடுத்தப்படுகின்றவர்கள் என்று கருதப்படும்.

இந்த பிரிவின் பணிகளுக்காக விளக்கம் தேவைப்படின் ''வைத்திய சாலை'' என்பது, ஏதாவதொரு நோயினால் அல்லது குறைப்பாட்டினால் கஷ்டப்படுகின்றவர்கள் அல்லது மிருகங்களை ஏற்றுக்கொள்ளல், அவர்களுக்கு முதலுதவி செய்தல் மற்றும் உபகாரம் செய்வதற்காக ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கின்றவர்கள் (எவ்விதத்தில் விபரிக்கப்பட்டுள்ள போதும்) இடையே தாதியர் மனை, சிகிச்சை நிலையம், வைத்திய நிலையம், கர்ப்பிணி மனை மற்றும் மிருக வைத்தியசாலை/மிருக சிகிச்சை நிலையம் இதற்கு உள்வாங்கப்படும்.

''அபாயகரமான பாதுகாப்புடைய கழிவுகள்'' என்பது, இரசாயன கழிவுப் பொருட்கள், உடல் பகுதிகள், வளர்ச்சியற்ற கரு, ஊறுவிளைவிக்க கூடியதும் அதிகூடிய ஊறுவிளைவிக்க கூடியதுமான கழிவுப் பொருட்கள் மற்றும் முனையுடைய ஊசி.

''அலுவலகம்'' என்பது, 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, சாப்பு மற்றும் அலுவலக சேவையில் ஈடுபடுவோர் பற்றிய சட்டத்தில் (129 ஆம் அத்தியாயம் ) உள்ளவாறு பொருள்படும்.

''சாப்பு'' என்பது, மொத்தமாக அல்லது சில்லறை வியாபாரத்திற்காக பொருட்களை வைத்துள்ள இடமாவதுடன், உணவு, குடிபானம் விற்பனைக்காக வைத்திருக்கும் இடம் மற்றும் முடிதரிக்கும் சாப்பு அல்லது அழகுக் கலை சலூன் ஒன்றினை கொண்டு நடாத்துகின்ற நிலையத்தினை இதற்காக உள்வாங்கப்படும்.

30. இத்துணைவிதியில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிக்கிடையில் ஏதேனும் பொருத்தப்பாடின்மை தோன்றுமாயின் சிங்கள மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளதே ஏற்றுக்கொள்ளப்படும்.

4-831